புதுவாழ்வு

ஆசிரியர், க. அன்பழகன், M.A.

Best copy available

புதுவாழ்வு

மாலை 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஐப்பசி | மலர் 9, 10

ஆசிரியர்: க. அன்பழகன் எம்.ஏ.,

துணை ஆசிரியர்: கே. ஜி. இராதாமணாளன்.

உள்ளுறை

வாழ்த்துக்கண்ணி!	...	2
ஈரோடு மாநாடு (ஓர் எச்சரிக்கை)		5
களம் நோக்கிக் காளைகள்	...	11
உலகச்சூழல்	...	15
அணையா ஜோதி	...	19
ஜெபமாலை	...	23
கிரேக்கநாட்டின் கீர்த்தி	...	27
தமிழர்கள் பெருமை	...	31
பட்டினப்பாக்கம்	...	37
தீபமும் திகைப்பும்	...	41
உரைகல்	...	46

10, வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை-7.

விலை அணா 4

நவம்பர்
1948

திராவிட மாநாடு

வாழ்த்துக் கண்ணி

★

திராவிட மாநாடு வாழ்க
செல்வத் திருநாடு——— (திரா)

விரோதியென்றாலும் விருந்திடத்தேடும்
புராதனமாகப் புகழ்பெற்றநாடு (திரா)

செந்தமிழின் வழிவந்தது
தெலுங்கொடு கன்னடமென்பது
சொந்தமிகும் மலையாளமும் சேர்தரு
சொற்கள் வழங்கிடும் விற்பன்னரோங்கிடும் (திரா)

வாழ்வில் மாந்தர் தவறாவிதம் வள்ளுவன்
மாமறை தந்த தென்னாடு
காவலனும் இளங்கோவின் சிலப்பதி
காரத்தினாலே சிறப்புற்ற எங்கள் (திரா)

உலகம் வியக்க சுதேச கப்பல்
ஓட்டிப் புகழொளி வீச
திலகமென நம் திராவிடரான
சிதம்பரம் பிள்ளை செயல்புரிந்த நம் (திரா)

★ [நகைச்சுவை அரசு, என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தம் குழுவினருடன், ஈரோடு மாநாட்டில் பாடி மகிழ்வித்த இவ்வரிய பாடல்—திருவாளர் உடுமலை. நாராயணக் கவி அவர்களால் இயற்றப்பட்டதாகும்.]

★

பாட்டால் புரட்சி ஊட்டி
பகுத்தறிவுச்சுடர் காட்டி
பழமையை நீக்கும் பண்பையுணர்த்திய
பாவலன் பாரதிதாசன் பிறந்த (திரா)

தமிழனுக்கோர் தனிப்பரிசு—நம்
தாத்தா தமிழ்ச்சுவையரசு
தொல்கலை பயின்ற கல்விக்கடலாம்
கல்யாணசுந்தரக் கலைவாணர்வந்த (திரா)

அரசியல் தமிழ் ஆங்கிலத்துறை—நன்
கறிந்தவர் நம் அண்ணாத்துரை
அறிவு மிகுந்திடும் அவருரைகேட்டு
அறிஞர்கள் பெருகிடும் அழகிய நமதொரு (திரா)

பழமையான மூடப்பழக்க வழக்கத்தில்
பாழ்பட்ட நெஞ்சர்க்குப் புரியார்
படித்துணர்ந்து பகுத்தறிவுக்கட்சிதன்னை
பரவச்செய்துவரும் நெறியார்
இழிவை நீக்கும் ஈ. வெ. ராமசாமி என்ற
எங்கள் தந்தை உண்மைப்பெரியார்——மன
இருளை நீக்கி நம்மை மனிதனுக்கி——மத
வெறியைப் போக்கி நல்ல
நெறியைக் காட்டவந்த (திரா)

குரு தைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜுரம்
ஜன்னி முதலிய சகலவித
வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது
210-வியாதிகளுக்கு
அரசன்

248

GURUCURES

22

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்

குரு மருந்து சாலை.......... திருச்சிராப்பள்ளி

புதுவாழ்வு

ஈரோடு மாநாடு

ஓர் எச்சரிக்கை

திராவிடக் கழகத் தனி மாகாண மாநாடு—ஈரோட்டில் நடத்துவதென, திடீரென முடிவு செய்யப்பட்டு அவ்வாறே அக்டோபர் 23, 24 தேதிகளில், திராவிடத்தளபதி தோழர். C. N. அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

மாநாடு நடைபெறுவதற்கு முதல் நாள் மாலையிலேயே—ஈரோடு நகர வீதிகளிலெல்லாம் கருமுகில்கள் இறங்கி நடந்ததென்ன கருப்புடை அணிந்த ஆடவரும் பெண்டிரும் வலம் வரலாயினர். ஈரோடு வந்து சேரும் ரயில்களிலும் பஸ்களிலும் வண்டிகளிலும் முதல் நாட் காலையிலிருந்தே மக்கள் வந்து சேர்ந்த வண்ணமிருந்தனர். மாநாடு ஈரோட்டில்தான் எனினும், சென்னை செண்ட்ரலிலும், திருச்சி சந்திப்பிலும், கோவை சந்திப்பிலும், ஒவ்வொரு ரயிலும் புறப்படும் போதும்—ஒரு மாநாடெனவே தோழர்கள் திரண்டனர். 'இந்தி வீழ்க!' 'தமிழ் வாழ்க!' 'திராவிட நாடு திராவிடருக்கே!' என்றெழுந்த முழக்கங்கள், வழியிலுள்ள—நிலையங்களை யெல்லாங் கூட அதிரச் செய்தன.

சென்னை மாகாணப் பிரதமர் ஓமாந்தூரார், தமது ஒற்றர் (C. I. D.)களையே கூட முற்றும் நம்பிவிடாமல், மாநாட்டின் உணர்ச்சியைத் தாமே நேரிற் கண்டறிய விரும்பியவரைப் போல முதல் நாள் இரவு, சென்னையிலிருந்து அவரும் கோவைக்குப் பயணமானார். வழிநெடுக நமது தோழர்கள் எழுப்பிய ஒலிகள் அவர் செவி புகாமலிருக்க முடியாது!

ஈரோடு வந்து சேர்ந்து விட்டோம் என்ற குதூகலத்துடன் வண்டியை விட்டிறங்கி, நிலையத்தில் நின்ற தொண்டர்களைத் தங்குமிடமெங்கே? என்று கேட்டவர்கட்கெல்லாம் விடுதிகள் யாவும் நிறைந்து விட்டன—நேரே மாநாட்டுப் பந்தலுக்கே செல்லுங்கள் என்ற பதிலே கிடைத்தது.

சுமார் 50,000 மக்கள் திடீரென ஒரு ஊரில் படையெடுப்பதானால், அதை எதிர்பாராத அவ்வூர் மக்கள் என்ன செய்

வார்கள்? அவ்வூரார் மட்டுமேயல்ல, மாநாட்டு வரவேற்புக் குழுவினரேகூட—இம்மாநாட்டிற்கு இவ்வளவுபேர் வருவார்கள் என்பதை எதிர்பார்க்கவில்லை!

மாநாடு துவக்க நாளன்று காலை நடந்த மாபெரும் ஊர்வலம், காலை 9-மணிக்குத் தொடங்கி 12 மணிக்கு முடிவுற்றது. இந்த ஊர்வலத்தைக் கண்ட ஈரோட்டு மக்களெல்லாம், கழகத்திற்குப் பொது மக்களிடத்தில் செல்வாக்கில்லை என்று காங்கிரஸ்காரர்கள் கூறிவந்ததின் பொய்மையை நன்கு உணர்ந்து கொண்டனர்.

மாநாட்டிற்காக வந்திருந்த பெண்களும், எண்ணிக்கை ஒன்றைத் தவிர்த்து மற்றவற்றில் ஆண்களோடு சரிநிகர் சமானமாகக் கலந்து கொண்டதையும், அதிலும் மிக்க வீரத்தோடும் உற்சாகத்தோடும் காணப்பட்டதையும், கண்டபோது சுயமரியாதை இயக்கம் தோன்றியதன் பயனல்லவா இது! என்ற எண்ணம் அனைவருக்கும் தோன்றிற்று.

தாய்மார்கள், தம் தாய்மொழியை மறவார், மாற்றார் மொழியினை ஒருபோதும் ஏற்கார், தாய்மொழி ஆட்சி நடைபெற வேண்டிய இடத்தில் பிறமொழி ஆட்சியை ஒருநாளும் ஒப்பமாட்டார். அதற்காக, தண்டனை தரப்படின் ஏற்பர், வெஞ்சிறைக்கும் அஞ்சார், இன்னுயிர் வேண்டினும் உள்ள மூவந்து அளிப்பர் என்ற உண்மையை உலகினர்க்கு உணர்த்த வந்ததுபோல அவர்களது கூட்டம் காட்சியளித்தது. அத் தாய்மார்களே தனித்து ஒரு மாநாடு நடத்தியிருக்கலாம்! இவ்வளவு தொல்லைகளுக்கிடையிலேயும் 'இந்தி எதிர்ப்பிலே' உள்ள ஆர்வத்தால் அவ்வளவு பேர் கலந்து கொண்டனர்.

இம்மாநாடு பார்ப்பனப் பத்திரிகாசிரியர்களும், அதன் நிருபர்களும், எதிர்பார்த்ததற்கு மாறாகச் சிறுஞ் சிறப்புமாக நடைபெற்று விட்டது. அவர்கள் எதிர்பார்த்தபடி, ஏதேனும் ஒரு சிறு கலகம், குழப்பம் நடைபெற்றிருந்தாலும், மாநாட்டுச் செய்தியைக் கலகச் செய்தியாகவே வெளியிட்டிருப்பார்களே ! அவர்களது நிருபர்கள் மாநாட்டிற்கு வந்திருந்துங்கூட, இச்செய்தி அடியோடு மறைக்கப்பட்டுவிட்டது என்பது வேறு எதைக் காட்டுகிறது என்று எண்ணிப் பாருங்கள். இது அவர்களின் "பிறவிப் பெருங் குணமல்லவா?" மனு வழி வந்தோரின் "பத்திரிகா தருமமன்றோ?" காலத்திற்கேற்றபடி கைக்கொள்ளப்படும். 'இருட்டடைப்புக் கைங்கரியம் அன்றோ?' இதை எப்படிக் கைவிடத் துணிவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியும்?

இம்மாநாட்டிற்கு அறிஞர் ஏறு அண்ணாதுரை அவர்கள் தலைமை வகித்ததும், தன்மானத்தீரர் தோழர் குருசாமி அவர்கள் மாநாட்டினைத் துவங்கி வைத்ததும், திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்கள் கொடியேற்றி வைத்ததும் வியப்பிற்குரிய

தல்ல, எதிர்பாராததுமல்ல. அம்மூவரும் அப்பணிகட்குரிய தகுதியினர் என்பது மட்டு மல்ல உரிமை படைத்தவர்களு மாவர். அவர்களினும், தகுதி யும் உரிமையும் கொண்டவ ராக வேறெவரையும் காண்ட லும் அரிது. ஆனால், தளபதி அண்ணாதுரை அவர்கள் இனி கட்சிக்குப் பணிபுரிவாரா? போர்தொடுக்க நேரின் கலந்து கொள்வாரா? பெரியாருக்குத் துணையாகத் தலைமை தாங்கி நடத்துவாரா? என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சிலர், அவர் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பதை எதிர்பார்த்திருக்க வியலாது. என்றாலும், மகிழா மலிருக்க முடியாது, கடமை யைச் செய்வதற்குப் பின்வாங் காத ஒருவரைத் தலைவராகப் பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணும்போது.

அரசாங்கத்தாருக்கும், காங் கிரஸ் தோழர்களுக்கும் வேண்டுமானால், தலைவருடன்-- தளபதி கருத்து வேறுபட்டு விலகிக் கொண்டதால் இந்தி எதிர்ப்பு இயக்கம் இனி நடைபெறாது என்று பிரச் சாரம் செய்ய இடமில்லாமற் போயிற்றே என்ற ஏக்கம் ஏற் படலாம். அறப்போர், மறு படியும் தொடங்கப்படுவது கேட்க மேலும் துக்கம் வளர லாம். ஆனால் வீரர்கட்கு அன்றோர் விருந்து தலைவரின் அறிவுரை.

மாநாட்டின் திறப்புரையோ ஆளவந்தாரின் கண்களில் படர்ந்திருக்கும் ஆணவ மலத்தை விலக்கி அறிவொளி காணச் செய்வதாக இருந்தது. கொடியேற்று விழாவோ, மறு படியும் அறப்போர் தொடங்கி விட்டோம் என்பதை அரசாங் கத்தாருக்கு அறிவிப்பதற் கெனவே உயர்த்தப்பட்டதா கத் தோன்றியது.

மாநாட்டுத் துவக்கத்தில் கலைவாணர் N. S. கிருஷ்ணன் அவர்கள், தம்குழுவினருடன் "திராவிட மாநாடு வாழ்க செல்வத் திருநாடு"—என்ற பாடலை இசைத்த போது, மக் களடைந்த எழுச்சிக்கு அளவேயில்லை. ஒவ்வொரு கண்ணி முடியும் போதும் கைதட்டி மகிழாதார் இல்லை. திராவிடத்தின் மொழிகளை யும், விற்பன்னர்களையும், வள்ளுவனையும், இளங் கோவையும் பெற்றுச் சிறப் புற்ற நம்நாடு என்றிசைத் தால் இன்புறாதார் யார்? கப்ப லோட்டிய சிதம்பரத்தை, கவி ஞர் பாரதிதாசனை, கல்விக் கடல் கல்யாணசுந்தரனாரை, அரசியல் அறிஞர் அண்ணா துரையை, திராவிடத் தந்தை பெரியாரைப் பாராட்டி இசைக்கும் பாடலைக் கேட்டு மகிழாதார் யார்? அதிலும்— கலைவாணர் தம் நகைச்சுவை யிலே கலந்து வரும் அறிவுச் சுவையை நாட்டுப்பற்றெனும் உரிமைச்சுவையுடனும் தன் மானமெனும் உணர்வுச் சுவையுடனும் கலந்து (ஊட்ட) இசைக்க முன்வரும் போது, அதுகேட்டு உள்ள முருகா தாரும் உண்டோ? ஆனால், உருக்கும் கலைவாணரையும், உருகும் மக்களையும் ஒருங்கு கண்ட மாற்றுக்கட்சி யினருக்கு வேண்டுமானால்,

கொஞ்சம் 'பொறாமை' ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் எதிர்பார்த்தார்களா? கலைவாணரது பாராட்டும் நமக்குக் கிடைக்குமென்று!

அதுமட்டுமல்லவே, அவர்கள் கனவிலே கூடக் கருதியிருக்கமாட்டார்களே, தமிழ்ப் பெருநாவலர், சமரச சன்மார்க்க ஞானி, சைவச்சீலர் தமிழ்ப் பெரியார், திரு. வி. க. அவர்கள், இந்த மாநாட்டு மேடையில் காட்சியளிப்பாரென்று. அதிலும் 'மகாத்மாவின்' படத்தைத் திறந்து வைத்தார், என்றாலும் பரவாயில்லை, போனாலும் போகிறதெனில், தம் நண்பர் என்பதற்காக இந்த சு. ம. த்தலைவர் இராமசாமி நாயக்கரின் படத்தையேனும் திறந்திருந்தாலும் சகித்துக்கொள்ளலாம், போயும் போயும், காங்கிரசார் எதைத் தமக்கு நேர் மாறுபாடானது என்று எண்ணிக் கொண்டுள்ளனரோ, எது தோன்றினால் தென்னாட்டுக் காங்கிரசே அடியோடு ஒழிந்து விடுமோ, அப்படிப்பட்ட "திராவிடநாட்டின்" திருவுருவப் படத்தையல்லவா திறந்து வைத்துள்ளார்! என்பதை எண்ணுகிறபோது, அவர்களிலே பலருக்குத் தோன்றும் வியப்பு, மயக்கத்திலே கொண்டு போய்விடலாம்.

அதிலும், தமிழ்ப் பெரியார் அவர்கள, மழை காரணமாக எந்தப்படமும் திறப்பதற்கில்லாத நிலையில், படத்திலே உள்ள நாடு வெறும் எல்லைக் கோட்டைக் காட்டுவதென்றும், நாம் விரும்பும் திராவிட நாடு நம் உள்ளத்திலே இடம் பெற வேண்டும் என்றும், அந்த உண்மையான திராவிட நாடு இன்னும் பத்தே ஆண்டுகளில் கிடைப்பது உறுதி! உறுதி!! உறுதி!!! என்றும், தாம் இந்த முடிபுக்குத் திடீர் என வந்து விடவில்லை, மிகப் பல நாட்கள் சிந்தித்த பின்பே வந்திருப்பதாகவும், இது தம்முடைய சமதர்மக் கோட்பாட்டிற்கு மாறுபட்டது அன்றெனவும், இன்றைய இந்தியப் பாசிசக் கொடுங்கோன்மையினின்றும் விடுபட்டாலொழிய சமதர்மம் அரும்புவதும் இயலாதென்றும், எனவே திராவிட நாடு விடுபட்டால் நிச்சயமாக, ஒரு சமதர்மக் குடியரசாக மலர முடியுமென்றும், அம்மணம் நிச்சயமாக நாட்டு மக்கள் யாவருக்கும், பிற இந்தியருக்கும், உலகினர்க்கும் நன்மையே பயக்குமென்றும், அதற்காகவே பெரியாரவர்கள் பல்லாண்டுகளாகப் பாடுபட்டு வருவதாகவும், அவர் நீடு வாழ்ந்து வெற்றிகாண வேண்டுமெனவும், அவரது உழைப்பால் மலரும் உண்மைத் திராவிடத்தை, இன்னும் பத்தாண்டுகளில் அரும்பும் உண்மைத் திராவிடத் திருநாட்டை திறந்து வைக்கும் திருப்பணியைத் தமக்கு அளிக்க வேண்டுமெனத் தாம் கேட்டுக் கொள்வதாகவும், நிகழ்த்திய விளக்கமான உரையைக் கேட்டு—மாநாடே அவரை வாழ்த்திற்று.

பெரியார் திரு. வி. க. அவர்கள், "என்னைப் பலர், இந்தி

எதிர்ப்பு ஒன்றிலே மட்டும் பெரியாரோடு ஒத்திருப்பதாகக் கூறிக்கொண்டுள்ளனர். ஆனால் நானோ அந்த எல்லையைத் தாண்டி, திராவிடநாட்டு எல்லை வரையிலே பெரியாரோடு ஒத்திருக்கின்றேன் என்பதை இன்று அவர்கள் தெரிந்து கொள்வார்கள்" என்று கூறியபோது எழுந்த கையொலி அடங்க சில நிமிடங்கள் ஆயின. ஆனால் இவ்வுரையைக் கேட்ட மாற்றுக் கட்சியினர் மேலும் ஏமாற்றமடைந்திருப்பர். ஆனால் அவர்கள் கொள்ளவேண்டியது ஏமாற்றமல்ல—தெளிவு.

திரு. வி. க. அவர்களுடைய உரை, திடீர் மாற்றமல்ல, சுயநலச் சூது மொழியல்ல, மதப்பித்தமல்ல, அறியாதார் பிதற்றலுமல்ல. ஆனால் நீண்டநாள் சிந்தனையின் விளைவு, ஆராய்ச்சியின் முடிவு, அநுபவத்தின் பயன்.

அவர் கூறியுள்ளது போல, அவரே கூட, திராவிட நாட்டைச் சரியென்று ஒப்புக்கொள்ளாத காலமிருந்தது, அகில இந்தியாவிற்கும் சேர்த்தே திட்டமிட்ட காலமுமிருந்தது. இன்னும் கூறப்போனால், திராவிடநாடு ஏன்? பிரிவினை ஏன்? என்று கேட்டுக்கொண்டிருந்ததும் உண்மையாகும். அத்தகைய பெரியார் அறிவு வழிச்செல்பவர், உண்மையென்று பட்டதை உரைப்பவர், கள்ளங்கபடமற்றவராகையினாலே, தாம் ஏற்க மறுத்த அதே கொள்கையை, அதுவே சரியென்று தோன்றிய போது ஒப்புக் கொண்டுள்ளார். அவரது மாநாட்டு விரிவுரையைக் காங்கிரஸ் தோழர்கள், தமது கட்சி இதழ்களிலே காண முடியாவிடினும், அதனாலாவது, அந்நாள் 'விடுதலை' பெற்றுப் படித்து, சிந்திக்க வேண்டுகிறோம். தமிழ்ப் பெரியார் அவர்கள்—திராவிட நாட்டுப் பிரிவினையையே ஆதரிக்கிறார். காங்கிரஸ் தோழர் மா. பொ. சிவஞானமும் மற்றும் பல காங்கிரஸ் உண்மைத் தமிழர்களும் கட்டாய இந்தியை எதிர்க்கின்றனர். மற்றும் உண்மைத் தமிழர்களான ஊழியர்கள் பலர் காங்கிரசை விட்டு வெளியேறிய வண்ணமுள்ளனர். அதற்கு மாறாகப் பதவிப் பித்தரும் பணமூட்டைகளும், பல்லிளிக்கும் கும்பலும் சுயநலச் சொரூபங்களும், சொந்த மதியற்றோரும், சூதுக்காரரும் பொது மக்கள் எத்தரும், காங்கிரசில் பெருகிய வண்ணமுள்ளனர். பெருகுகின்றனர் என்பது தவறென்றால் அங்குள்ளவரின் உண்மைத் தோற்றம் வெளிவந்த வண்ணமுள்ளது, அதுவும் தவறெனில், அங்கிருந்த நல்லவர்களே இப்படி மாறுகிறார்கள். மாறவியலாதவர்கள் வெளிவருகிறார்கள். இத்தன்மையோர் காங்கிரசைப் பிடித்த உடும்புகள். உடும்பு உறுஞ்சாமலாவிடும்? காங்கிரஸ் இந்த உடும்புப் பிடியிலிருந்து தப்பியாவிடும்? என்பதைத்தான் காங்கிரஸ் தோழர்கள் சிந்திக்க வேண்டும். சிந்தித்தால் ஏமாற்றம் தோன்றாது, மாறாகத் தெளிவும் திடசித்த

மும் பிறக்கும், தமிழர்கள் வாழ வழி பிறக்கும்.

காங்கிரசிலே, இன்று விவசாயிகளுக்கு இடமில்லை. தொழிலாளிகளுக்கு இடமில்லை, ஏழைகள் வாழ்வுக்குத் திட்டமில்லை, தாய்மொழிப் பற்றுக்கும் வளர்ச்சிக்கும் வழியில்லை, அடிமைப்படுத்தும் மார்க்கம் அடைபட வகையில்லை, தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதார்க்கு மதிப்பில்லை, பொதுமக்களின் உணர்ச்சி மாறுபாட்டைக்காண மதியில்லை; மாருகப் பொதுமக்களின் விருப்பத்தை—மதிக்காமல், இனவுணர்ச்சியை ஒழிப்பதற்குத் திட்டமிடும் வடநாடு மேலிடத்துச் சர்வாதிகார, ஏகாதிபத்திய ஆட்சி நடத்துவதே—காங்கிரசின் கோட்பாடாக உயிர்மூச்சாக ஆகிவிட்டது.

இங்கிலையில் கட்டாய இந்தி வேண்டாம், அதுவும் இளம்பிள்ளைகளுக்கு (பள்ளிகளில்) வேண்டாம் என்ருல், கேட்கும் காதினரான நமது அமைச்சர்களும் கேளாக் காதினர் ஆகிவிடுகின்றனர். இதையே சாக்காக வைத்து—எதிர்க் கட்சியை—ஆண்டவளை போல—இருக்குமிடம் தெரியாமல் ஆக்கிவிட நினைக்கும் மந்திரிகட்கும் பெருந்தலைகட்கும் கோபம், பொங்கி வருகிறது. கோபத்திலே அவர்களது வாய் எதை எதையோ கொட்டுகிறது. ஆத்திரம் அதிகமாவது தெரிகிறது, கண்ணீர் கிளம்புவதைக் காண நேருவதால்.

இங்கிலையில்தான், நாட்டிற்கான நல்ல திட்டத்தை வகுப்பதற்காக, முடிவுகளைக் காண்பதற்காக ஈரோடு மாநாடு கூட்டப்பட்டது. அம் மாநாட்டில்—திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் நிகழ்த்திய விரிவுரையும் பிற தோழர்களின் சொற்பொழிவுகளும் — நாட்டுநிலையையும்—அதை மாற்றுவதற்குரிய வழி வகைகளையும் விளக்கியுள்ளன. முழு மனத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் யாவும், பாரபட்சமற்ற மனப்பான்மையுடன், உயர்ந்த நோக்கத்துடன் தீட்டப்பட்டவைகள் என்பதை, அவற்றை ஒருங்கு படிப்போர் எளிதில் உணரலாம். இவைகளைப் படித்துப் பார்ப்பது மட்டும் போதாது. சரியென்றுபட்ட தீர்மானங்களை நிறைவேற்ற பொது மக்கள் ஒத்துழைக்க முன்வர வேண்டுகிறோம்.

எனவேதான் — இம்மாநாடு நாட்டவர்க்கு ஓர் அன்பழைப்பு, வீரர்கட்கு ஓர் விருந்து, அறிவாளர்க்கு ஓர் சிந்தனைச் செல்வம், காங்கிரசாருக்கு ஓர் உண்மை விளக்கம், அரசாங்கத்திற்கு ஓர் எச்சரிக்கை, மற்றவர்கட்கு வருங்காலத்தின் அறிகுறி— என்று நாம் கூற விழைகிறோம். நாம் கூறுவது குறித்து அவரவரும் சிந்திக்க வேண்டுகிறோம். வெற்றி நமதே!

களம் நோக்கிக் காளைகள்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.,

இந்தி எதிர்ப்பு அறப்போர் ஆரம்பமாகிவிட்டது! ஆம்! மீண்டும் விட்ட இடத்திலிருந்து துவங்கிவிட்டது! ஓய்வு பெற்று வீடு சென்ற வீரர்கள் இளம்பிற்றுகாண் சிங்கக் கூட்டமென போர்க் களம் நோக்கிப் புறப்பட்டு விட்டனர்!

களம் நோக்கிக் காளைகள் நடக்க ஆரம்பித்துவிட்டனர்; ஆனால் அமைச்சர் குழு மட்டும் இருந்த இடம் விட்டு நகரவில்லை; நகரும் நல்லமதி இருப்பதாகவும் தெரியவில்லை!

போர் அற வழி நின்று நடக்குமே யல்லாது, மறவழி நின்று ஒருக்காலும் நடைபெறாது என்பதைத் தலைவர்கள் ஆரம்பக் கட்டத்திலேயே எடுத்துரைத்தார்கள். அண்மையில் நடைபெற்ற ஈரோட்டுப் பாசறைக் கூட்டத்திலும் தெளிவுபடுத்தியுள்ளார்கள். என்றாலும் அமைச்சர் குழாம் அடக்குமுறைகளை அவிழ்த்துவிடும் போக்கிலே தம் கவனத்தைச் செலுத்தி வருவதாகவே சொல்லப்படுகிறது. இன்றைய மந்திரி சபை ஆணவத்தை நெஞ்சிலே ஏந்தி, கொடுமை விஷத்தைக் கண்ணிலே தாங்கி, அடக்கு முறையின் உச்சியிலே ஏறி நின்றாலும், களம் நோக்கி நடக்கும் காளைகள் ஆச்சரியப்படவோ அச்சங்கொள்ளவோ மாட்டார்கள். காரணம் மந்திரி சபையின் அறியாமையை அவர்கள் உணர்கிறார்கள்; மந்திரி சபையின் அடக்குமுறை என்றேனும் ஓர்நாள் அற்று வீழும் என்பதையும் அறிகிறார்கள். இந்த உணர்ச்சியை ஈரோடு மாநாடு மக்களுக்கு மட்டுமல்ல, மந்திரிகளுக்கும் விளக்கிக் காட்டிவிட்டது.

போர் முரசம் ஆர்த்தது ஈரோட்டில். போர் வீரர் கேட்டனர். ஓடோடியும் வந்தனர். ஒன்று திரண்டனர். தளபதியின் கட்டளைக்குக் காத்திருந்தனர். தலைவரின் முன்னிலையில் தளபதியின் கட்டளை பிறந்ததும் ஒரே முழக்கம் கேட்டது. "நவம்பர் முதலில் அறப்போர் ஆரம்பம், தயாரா?' என்றதும் 'தயார்! தயார்!' என்ற வீர முழக்கம் நாலா பக்கங்களிலிருந்தும் இடி ஒலியென எழுந்தது.

போருக்குத் தயாரென்று முன்வந்த வீரர்களின் தொகை முன்னைவிட மிகுதி என்பது மட்டுமல்லாமல், செயலாற்றும் முறையும் முன்னை விடக் கடுமையாகவே இருக்கும் என்பதை மாநாட்டின் முடிவுகள் அறிவித்துவிட்டன.

1. குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தின் முன் மறியல் செய்வது.
2. மறுத்தால் மீறுவது.
3. கூட்டங்கள் போடுவது.
4. தடை விதித்தால், மீறுவது.

5. கைது செய்தால், பணிவது.

6, வழக்கு தொடுத்தால், எதிர் வழக்காடாமலிருப்பது.

7. சிறையிலிட்டால், ஏற்பது.

8. ஜாமீன் கேட்டால், வெளிவர மறுப்பது.

9. அபராதம் போட்டால் கட்ட மறுப்பது.

10. வெறுப்பைக் காட்ட பிரதம ருக்கும் கல்வி மந்திரிக்கும் கறுப்புக் கொடி பிடிப்பது.

இவை இப்போதைய இந்தி எதிர்ப்பின் முக்கிய அறப்போர் திட்டங்களாகத் திட்டப்பட்டுள்ளன. எனவே இதைச் சமாளித்துத் தீருவது என்று எண்ணும் அரசாங்கத்தின் அடக்குமுறையும் கடுமையாகவே இருக்கும். நிலைமை அப்படியானல் நாட்டில் அமைதி நிலவ வழியில்லை. எங்கணும் போர்க்களங்கள் தோன்றியே தீரும்.

இடைக் காலத்தில் இந்தி எதிர்ப்பு மறியல் நின்றிருந்ததற்கு எதிர்ப்பின் சக்தி குறைந்துவிட்டதென்று அரசாங்கமும், அதனை அண்டி வாழும் சுயநலமிகளும் எண்ணிக் கொண்டிருந்தார்களாம்! அவர்கட்கு ஈரோடு மாநாடு நல்ல பாடங் கற்பித்துவிட்டது. நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்படும் காரணத்தினால் தான் அறப்போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. தலைவர் பெரியார் பிரதமர் ரெட்டியாருக்கு வாக்குக் கொடுத்திருந்தார், ஹைதராபாத்துக்கும் இந்திய யூனியன் அரசாங்கத்துக்கும் போர் ஏற்படின், அது முடியும்வரை யூனியன் மாகாண அரசாங்க நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கத் தாம் விரும்பவில்லை என்று. இந்த அறப்போர் ஆரம்பித்த சில நாட்களுக்கெல்லாம் இந்தியா—ஹைதராபாத் போலீஸ் நடவடிக்கை ஆரம்பமாயிற்று. முன்னர் வாக்குக் கொடுத்ததற்கிணங்க, அறப்போர், தலைவரின் திடீர் கட்டளையின் பேரில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. ஹைதராபாத் இந்திய யூனியனிடம் சரணடைந்து நிலைமை போர்க் கட்டத்திலிருந்து அமைதிக் கட்டத்தை அடைந்தவுடன் அறப்போரை விட்ட இடத்திலிருந்து துவங்குவதென தலைவர்களால் முடிவு செய்யப்பட்டது. இது நேர்மையின் அறிகுறியாகும்.

இந்தி திராவிடத்தில் நுழைவதை, அதுவும் பள்ளிகளில் நுழைவதை, அதுவும் இளம் பிள்ளைகளிடத்து நுழைவதை, அதுவும் வலுக்கட்டாயமாக நுழைக்கப்படுவதை நாம் பல தடவைகளில் காரணங்களைக் காட்டி விளக்கி வந்திருக்கிறோம். பொதுக்கூட்டங்கள் மாநாடுகள் கூட்டிப் பொதுமக்கள் விரும்பவில்லை என்பதைத் தெரிவித்து வந்துள்ளோம். தமிழறிஞர்களும், பேராசிரியர்களும் எதிர்ப்பதை எடுத்துக் காட்டியிருக்கிறோம். மாணவர்கள் விரும்பவில்லை என்பதை அவர்கள் இந்திவகுப்புக்குச் செல்லாமல் நின்றுவிடுவதையும், இந்திப்புத்தகங்களைக் கிழித்து நெருப்பிலிடுவதையும் சுட்டிக்காண்பித்துள்ளோம். மக்கள், இந்தியை நுழைப்பதன் காரணமாக மக்

திரிசபையையே வெறுக்கிறார்கள் என்பதை அவர்கள் மந்திரிகளுக்குக் கறுப்புக்கொடி காட்டுவதிலிருந்து உணர்த்தியுள்ளோம். ஆயிரக்கணக்கானவர்கள் சிறை செல்லவும் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகக் கூறிவந்துள்ளோம். இவ்வளவும் தம் தாய் மொழியைக் காக்க, தம் தாய் நாட்டு மக்களை மாறுபட்ட கலாச்சார மக்களுக்கு அடிமைப்படாமல் தடுக்க. இவற்றையெல்லாம், அடக்குமுறை ஆயுதம் ஒன்றைக் கொண்டே ஒடுக்கி, ஒழித்து விடலாம் என்று அரசாங்கம் எண்ணியிருக்கிறது. ஆனால், அடக்குமுறை, எதிர்ப்புத் தீயிக்கு எண்ணெய் வார்ப்பதுபோல் இருந்து வருகிறது என்பது கண்கூடு.

அரசாங்கம் ஜனநாயக முறையில் நீதியையும், நேர்மையையும் கடைப்பிடிக்குமேயானால் அது அடக்குமுறையாலல்ல, அறிவுவழி கொண்டு நிலைமையைச் சமாளிக்க முனைந்திருக்கும். இந்தி இஷ்டப் பாடமாகத்தான் வைக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சரும், ஏனையோரும், சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பதற்கொப்ப திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். இந்தியும், அதனோடு இணைத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய மொழிகளும், தனித்தனியே இஷ்டப் பாடந்தான் என்றும் கூறுகிறார்கள். ஆகவே இந்த இரண்டாவது பிரிவு மொழிகளில் எந்த ஒரு மொழியும் கட்டாயம் படித்துத் தீரவேண்டும் என்ற அவசியம் இல்லாதபோது, எதற்காக இந்தப் "பிரிவை" மட்டும் கட்டாயப்படுத்த வேண்டும்? பிரிவிலுள்ள மொழிகளை இஷ்டமாக ஆக்கி இருக்கும்போது ஏன் இந்தப் பிரிவையே இஷ்டமாக ஆக்கக் கூடாது?

இந்தி இஷ்டப் பாடந்தான் என்று சொல்வதிலே உண்மையிருக்குமானால், சொல்லுகிறவர்களிடம் நேர்மையிருக்குமானால், அவர்கள் வெளிப்படையாகவே அந்தப் பிரிவு முழுவதையும் இஷ்டப் பாடமாக ஆக்கியிருக்கலாம், எதிர்ப்பையும் சமாளித்திருக்கலாம். இதை அறிவின்பாற்பட்ட வழியாகவும் அறிஞரெல்லோரும் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். இதை விடுத்து முதல் மூன்று பாரங்களுக்குரிய மொழித்திட்டத்தில் இரண்டாவது பிரிவைக் கட்டாயப்படுத்தி, அதிலுள்ள மொழிகளை மட்டும் இஷ்டப் பாடமாக்கி, இந்திக்கு மட்டும் எல்லாவித சலுகைகளும் கொடுத்திருப்பது அரசாங்கத்தின், குறிப்பாக காங்கிரஸ் மந்திரி சபையின் கீழ்த்தரமான—கொல்லைப்புற வழி நாடும் தந்திரமான புத்தியைத்தான் காண்பிக்கிறது. இக்காரணங்களால்தான் இந்தி நடைமுறையில் கட்டாயப்பாடமாக விளங்குகிறது என்பதைச் சுட்டிக்காட்டி இந்தி எதிர்ப்பாளர்கள் போர் தொடங்கி உள்ளார்கள்.

இந்தி படையெடுப்பு வெறும் மொழிப் படையெடுப்பு மட்டுமல்ல, அது கலாச்சார படையெடுப்பு அரசியல் படையெடுப்பு, பொருளாதாரப்

படையெடுப்பு ஆகும். அரசியல், பொருளாதாரத் துறைகளில் வடநாட்டுத் தொடர்பினின்றும் திராவிடத்தைப் பிரித்துக் காண எண்ணும் திராவிடக் கழகம், வடநாட்டினின்றும் இறக்குமதியாகும் மொழியையும் எதிர்த்து நிற்க வேண்டியது அவசியமாகிறது. இந்தியா ஒரு தேசம் (நாடு) அல்ல. எனவே இந்தியும் இந்தியா முழுமைக்கும் தேசிய மொழியாகாது. திராவிடத்தின் தேசிய மொழி தமிழும் அதனோடு இணைந்த திராவிடக் குழு மொழிகளுமேயன்றி வேறாக இருக்க முடியாது. திராவிடத்திற்குப் பொது மொழி ஒன்று தேவை. அதற்கு உலகப் பொது மொழியாகிய ஆங்கிலம் இருக்கிறது. 'திராவிடம்' உலகப் பொதுமொழியையே ஏற்றுக் கொள்ளும் போது, இந்தியாவுக்காகத் தனியே ஒரு பொது மொழி தேவையில்லை. ஆகவே திராவிடர்க்குத் தாய் மொழியும், உலகப் பொது மொழியும் மட்டும் போதுமானவை. வேறு மொழிகளுக்குத் தனிப்பட்ட முறையிலல்லாமல் பொதுவான முறையில்—அரசாங்க வழியில் நேரமோ, நினைப்போ, உழைப்போ, பொருளோ செலவழிக்க வேண்டிய அவசியமேயில்லை.

இத்தகைய சிறந்த காரணங்களைக் கொண்டுதான் இந்தி மறுப்பு மீண்டும் துவங்கப்பட்டுள்ளது. இனி அது வெற்றிபெறும் வரையில் இடையில் நிற்காது. கடைசி மூச்சு, சொட்டு இரத்தம், சிறிது உரம் ஒரு தொண்டருக்கேனும் உள்ள மட்டும் நடந்தே தீரும். "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்ற உறுதி கொண்ட உள்ளத்தோடு களம் நோக்கிக் காளைகள் நடக்கிறார்கள். வாழ்க அவர்கள் கொற்றம்! வீழ்க கட்டாய இந்தி!

★ புதுவாழ்வு ★

அன்பர்கள்—தாமதத்திற்குப் பொறுக்க வேண்டுகிறோம். இனி ஒவ்வொரு ஆங்கில மாத முதலிலிலும் 'புதுவாழ்வு' வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மதுரை, திருச்சி—ஆகிய நகர்களுக்கும்—மற்றும் பல ஊர்கட்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. வேண்டுவோர் உடனே எழுதுக.

நிர்வாகி

உலகச் சுழல்

அரங்கண்ணல்

வாழ்க ஐ. நா. சபை!

சான்பிரான்சிஸ்கோவில் பல நாடுகள் முன்னிலையில் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைக்கு 'மூன்று ஆண்டுகள்' முடிந்து விட்டன. தடைக்கற்கள் பல வென்றாலும் தத்தி எழும்பி நிற்கமுடியும் என்ற உண்மையை இந்த மூன்று ஆண்டுகளில் அது சந்திக்க நேர்ந்த பல பிரச்சனைகள் தெளிவாக்கிவிட்டன. ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டதன் நோக்கம் நாடுகளிடையே சமாதானம் நிலவ வேண்டுமென்பது மட்டுமல்ல, தொல்லைகளின் மத்தியில் உழலும் மனித சமுதாயத்தின் நிலை உயர்த்தப்பட வேண்டுமென்பதுமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் கிளைகளே பாதுகாப்பு சபை, பொருளாதாரக் குழு முதலியன. பொருளாதார சமுதாய முன்னேற்றக் கவுன்சில் பல்லாற்றானும் உலக முன்னேற்றத்துக்கான காரியங்களை ஆற்ற முயன்று வருகிறது. ஆனால் பாதுகாப்பு சபையின் நிலைதான் 'இரண்டுங்கெட்டானாக'—யாவரும் பரிதாபப்படும் நிலையில் இருக்கின்றது. பாதுகாப்பு சபை முன் கொண்டுவரப்பட்ட எந்தத் தகராறும் தீர்க்கப்படவேயில்லை. பாலஸ்தீனப் பரிதாபம், பெர்லின் பிரச்சனை, காஷ்மீர் தகராறு தென் ஆப்பிரிக்க நிறத்திமிர்... எல்லாம் பாதுகாப்பு சபையில் வளர்ந்துகொண்டே போகிறது, ஐக்கிய நாடுகள் சபையின் அந்திநேரம் நெருங்கிவிடுமோ என ஐயப்படும் நிலையில். ஆனால் சந்தேகமும், சங்கடமும் நர்த்தனம் புரிந்தாலும் உலக நாடுகளிடையே ஓரளவு நல்லெண்ணம், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் நிலை, கலந்து பேசும் சந்தர்ப்பம் ஆகியவைகளையாவது கிடைக்கும்படிச் செய்து வருகிறது ஐ.நா. சபை...

ஐக்கிய நாடுகள் சபை துவக்கத்தில் அதன் விதிகள் நிர்ணயிக்கப் படுகையில் காட்டிய

'ஓரவஞ்சனை'யின் பலனை அதற்குக் காரணமாயிருந்த நாடுகளே இன்று உணருகின்றன. உலகப் போரில் பங்கு கொண்ட வல்லரசுகளுக்கு மட்டும் தனித்த—விசேஷ அதிகாரம் ஒன்று அளிக்கப்பட்டது. எல்லா நாடுகளும் அங்கம் வகிக்கும் ஒரு சபையில் சிறுநாடு, பெரு வல்லரசு, என்ற பிளவு ஏற்படுத்தப்பட்டதன் விளைவே இன்று இக் கெடு நிலைக்குக் கொண்டு வந்து விட்டது. அதற்குக் காரணம் ஐ வல்லரசுகளும், சபையின் பெரும்பான்மை வாக்கு பெற்றிருந்தாலும் ஒரு முடிவை எந்த ஒரு வல்லரசாவது நிராகரித்து விடலாம் என்பதே. இது தான் 'வெடோ' அல்லது 'ரத்து அதிகாரம்' என்று சொல்லப்படுவது! சமீபத்தில் பெர்லின் பிரச்சனை பற்றிப் பாதுகாப்பு சபையில் ஒரு முடிவு செய்யப்பட்டதும் ரஷ்யா தன் 'வெடோ'வை உபயோகித்ததும் யாவருக்கும் விளங்கும்.

குறைபாடுகள் பல இருந்தாலும் உலகப் பொதுச்சபையாக விளங்கும் இதை வலுப்படுத்த வேண்டியது ஒவ்வொரு நாட்டிற்கும் உரிய கடமையேயாகும். ஆனால் இன்று அமெரிக்க-ரஷ்ய முகாம்கள் 'வெளிப்படை'யாகவே போர் முழக்கம் செய்யத் துவங்கி யிருக்கின்ற வேளையில் 'ஐ. நா. சபை வாழட்டும்' என்று நாம் சஞ்சலத்துடனேயே கூறவேண்டியிருக்கிறது!

கீழ்த் திசையில்....செந்தீ!

பர்மா, கொரியா, இந்தோனேஷியா, மலேயா—அநேகமாக எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ்டுகள் கிளர்ச்சி மும்முரமாக உச்ச நிலைக்குப் போய்க் கொண்டே யுள்ளது. அழுகு கொழிக்கும் சீனாவோ அமெரிக்கா-ரஷ்யர் ஆகிய இருவர்களின் பலப் பரீட்சைத் தளமாகச் சிக்கிச் சின்னாபின்னப் பட்டு வருகிறது. மஞ்சூரியாவில் கடுமையான போர் நடைபெற்றபின் அது கம்யூனிஸ்டுகள் வசம் ஆகிவிட்டது. அநேகமாகச் சீன சர்க்கார் படைகளைக் கம்யூனிஸ்டுகள் எங்கும் முறியடித்து வருகின்றனர் என்றே கூறவேண்டும்! பர்மாவிலோ கிளர்ச்சி 'அடங்கியபாடில்லை. மலேயாவிலும் எங்கெங்கு நோக்கினும் அங்கங்கும் கிளர்ச்சியாகவே இருக்கிறது. தென் கொரியாவில் தங்கள் படைகளை ரஷ்யர் திரும்பப்பெற்றபின் புரட்சிஎரிமலை வெடித்துள்ளது. பொதுவாகக் கீழ்த்திசை நாடுகள் எங்கும் செந்தீ கவ்விக் கொண்டு வருகிறது என்றே கூறலாம்!

இலங்கையில் 'எட்டு லட்சம்'!

இலங்கையில் எட்டு லட்சம் இந்தியர் வசிக்கிறார்கள்—அதாவது பிறந்த நாட்டில் வாழவழியின்றி 'திரைகடலோடியாவது இரைதேட முயல்வோம்' என்ற சபல ஆசையால் கடல் கடந்து, உழைத்து உயிர் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். டொமினி

யன் உரிமை பெற்றுள்ள இலங்கையில் வாழும் இந்தியரின் உரிமைகள் பற்றித் தகராறு ஏற்பட்டுள்ளது. ஆசை காட்டி அழைத்த 'கங்காணி'களின் பேச்சைக் கேட்டுச் சென்ற உழைப்பாளிகளை வஞ்சிக்கும் அளவில் இரண்டு மசோதாக்கள்—இலங்கைக் குடிமை உரிமை மசோதா, குடியேற்ற மசோதா—நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்னொன்று இந்தியர் குடிமை உரிமை மசோதா என்பதாக நிறைவேற்றப்படும் நிலைமையில் இருக்கிறது. முதலிரண்டு மசோதாக்களிலுமே இந்தியர் உரிமைகள் அநேகமாக தியாகி விட்டன என்றாலும், நிறைவேற்றப்படும் நிலையிலிருக்கும் மசோதாவே 'இந்தியர் உரிமை'யின்மீது பாய்ச்சப்படும் நேர்பாணம் ஆகும்! தாங்கள் அழைத்ததால் வந்து, தங்களுக்காக உழைத்து உருக்குலைந்த மக்களை வஞ்சிக்கும் போக்கிலிருக்கிறது இலங்கை சர்க்கார் எண்ணம்! இலங்கையின் குடிமக்கள் என உரிமைபெற இந்தியருக்கு என ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளைக் கவனித்தால் ஏராளமான இந்தியர் வாக்குரிமை, குடிமை உரிமை அற்றவர்களாகவே ஆகிவிடுவார்கள் என்பது விளங்கும்!

இந்தப் பரிதாப நிலைமையைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோறி சென்னை சட்டசபை ஒரு தீர்மான மூலம் மத்திய சர்க்காருக்குத் 'தண்டம்' சமர்ப்பித்துள்ளது. இலங்கை வாழ் இந்தியர் எட்டு லட்சத்தில் 'பொன் விளைந்தும் புசிக்க வழியற்ற' நிலையில் கடல் கடந்த திராவிட மக்களே பெரும் பான்மையோராவர்! என்ன செய்வது? நமக்கு ஏற்பட்டுள்ள இக்குறை தீர்க்கக் கூட மத்திய சர்க்கார் கையில் தானே சூத்திரம் இருக்கிறது? சென்னை சர்க்காரின் 'தண்டத்து'க்கு கிட்டும் பலனைப் பொறுத்துத்தான் பார்க்கவேண்டும்

காங்கிரஸ் திராவிடம்!

அண்மையில் நடைபெற்ற அ. இ. காங்கிரஸ் தலைவர் தேர்தலில் வடநாட்டுத் தலைவரான பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் அவர்களுடன் போட்டியிட்ட தென்னாட்டுப் பிரமுகர், ஆந்திரத் தலைவர், டாக்டர் பட்டாபி சீத்தாராமையா வெற்றி பெற்றுள்ளார்.

வடநாட்டுத் தாண்டன்—தென்னாட்டுப் பட்டாபியினைக் காட்டிலும் எதிலும் குறைவாக மதிப்பிடக் கூடியவருமல்ல. உயர்ந்த நோக்கமுமுடையவர் என்பதும் வெளிப்படையாகத் தெரிந்ததே.

பட்டாபியை — வடநாட்டுப் பெருந்தலைவர் எவரும் ஆதரிக்கவில்லை. தாண்டனை சங்கர் ராவ் தேவ் போன்ற பெருந் தலைவர் பலர் ஆதரித்து நின்றனர். எனினும் வடநாட்டுத் தலைவர் தோற்றார். அந்த வெற்றியின் பெருமையில் முதல் பங்கிற்கு உரியவர்களாகத்

தமிழர்கள் காணப்படுகிறார்கள். அடுத்து—ஆந்திரரும், கேரளரும், ஓரளவில் கன்னடியரும், பொதுவில் தென்னாட்டாரும் உள்ளனர். பட்டாபியை ஆந்திரர்—ஆதரித்ததிலே வியப்பில்லை! ஆந்திரர்—தமிழர் பிரச்சனையும் ஓரளவு வளர்ந்துள்ள நிலையில் தமிழர்கள் ஆந்திர—பட்டாபியையே பெரிதும் ஆதரித்தார்கள். அது எதைக்காட்டுகிறது என்பதைத்தான் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்தப்போட்டியில் வடநாடு தென்னாடு என்ற முகாம்கள் வெளிப்படையாகவே கலந்து கொண்டன என்பது தெளிவாகிவிட்டது. வடநாட்டவர் ஆதிக்கத்தில் நாம் என்றும் அடிமைப்பட்டிருத்தல் கூடாது' என்ற திராவிடக் கழகத்தின் இலட்சியம் தென்னாட்டுக் காங்கிரசார் உள்ளத்தில், அதிலும் தமிழ்நாட்டார் மனத்தில் சிறப்பாக அரும்பியுள்ளது என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்?

சரிகின்ற காங்கிரஸ் மாளிகையின் தலைமைப் பீடத்தில் எவர் அமருவதாயினும், ஆபத்துத்தான் என்பதை நாம் உணருவோமாயினும் பட்டாபியின வெற்றியிலிருந்து காங்கிரசாரிடம் தெளிவாகக் காணப்படும் "தென்னாட்டு உணர்ச்சி" மேலும் வளர்ந்து பயன் நல்க வேண்டுமென்பதே நமது ஆசை.

முன்னொரு தடவை—பட்டாபியின் தோல்வி—காந்தியாரின் தோல்வியாகக் கருதப்பட்டது. இப்பொழுதோ, பட்டாபியின் வெற்றி வடவரின் தோல்வியாக, தென்னாட்டவரின், திராவிடத்தவரின் வெற்றியாகக்கருதப்படும் நிலைபெற்றுள்ளது. வளர்க திராவிட உணர்ச்சி!

சென்னை தந்த பாடம்!

சமீபத்தில் நடைபெற்ற சென்னை நகரசபைத் தேர்தலில் நேர்முகமாகப் போட்டியிட்டால் தோற்றுவிடுவோம் என்பதை அறிந்து 'எல்லைக் கமிட்டி' என்ற முகமூடியுடன் போட்டியிட்ட, கபட நெஞ்சத்தவரின் கைப்பாவையாகிவிட்ட காங்கிரசுக்குக் கிடைக்க வேண்டிய சரியான பரிசைப் பொதுமக்கள் அளித்துள்ளார்கள். கவுன்சிலர்கள் தேர்தலில் மட்டுமின்றி ஆல்டர்மென் தேர்தலிலும்கூட காங்கிரசுக்குப் பிடிக்காத தோழர் ம. பொ. சிவஞானம், தோழியர் இந்திராணி பாலசுப்பிரமணியம், டாக்டர் பி. வி. செரியன் ஆகியோரே வெற்றி பெற்றுள்ளனர். திராவிடத் தலைநகரான சென்னையில் காங்கிரசின் பதவிப்பித்தத்திற்குச் சாவு மணி முதன் முதலாக அடிக்க ஆரம்பித்துள்ளது. அரசியல் குறித்துப் பெற்றுள்ள தெளிவையும் காங்கிரஸ் ராமராஜ்ய ஆட்சியின்மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பையும் காண்பிக்கும் ஏட்டில் இதை முதல் அத்தியாயம் என்றே கூற வேண்டும்.

★ அணையா ஜோதி

ஈரோட்டில், 23-10-48ல் நடைபெற்ற திராவிடக் கழக மாநாட்டில் உத்தமர் காந்தியின் உருவப் படத்தைத் திறந்துவைத்துக் கலைவாணர் N. S. K. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

மகாத்மா காந்தி அன்பின் திருவுருவம். அன்பைப் பற்றிக் கூறவந்த வள்ளுவர்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்று அருமையாக அருளியிருக்கிறார். அன்பில்லாதவர்களிட முள்ளவை, எதுவாயிருந்தாலும் சரி, அவை அனைத்தும் அவர்களுக்கே சொந்தமானவை. பிறர்க்குதவாதவை. தனியுடைமை கொண்டாடும் இவர்களைப் பற்றி இங்கே பேச்சில்லை. அன்புடையவர்களிட முள்ள பொருள், கல்வி எல்லாம் பிறர்க்குதவக்கூடியவை. இவை மட்டுமா, அன்புடையாரின் என்பு (எலும்பு)கூடப் பிறர்க்குதவுமாம்.

அன்பினாலே அகில உலகத்தையும் வென்றவர் மகாத்மா. இப்படி அன்பின் சிகரமான—அன்பின் திருவுருவமான மகாத்மா காந்தியின் எலும்பு மட்டுமல்ல, அப் பெரியவரைச் சுட்டெரித்த சாம்பல்கூட பிறர்க்குதவி என்பதைக் கண்டு கொண்டோம். மகாத்மாவின் உடலைப் பொசுக்கிய சாம்பல் காசியிலே கரைக்கப்பட்டது. கன்னியா குமரியிலே கரைத்தார்கள். கங்கையிலே கரைத்தார்கள். காவேரியிலே கரைத்தார்கள். இன்னும் அமெரிக்காவிலும் ஆப்ரிக்காவிலும் ஜப்பானிலும் சீனாவிலும்—ஏன் அகில உலகத்திலும் மகாத்மாவின் பூத உடலைப் பொசுக்கிய சாம்பல் மக்களுக்கு உதவிற்று. இவ்வளவு மாண்பும் மகிமையும் அன்பினாலே அடைந்த மகாத்மா ஒரு பெரிய பொய்யைச் சொல்லிவந்திருக்கிறார். அது என்ன? அதுதான் ராம ராஜ்யம் என்பது. ராமராஜ்யத்தை உண்மையில் உத்தமர்

காந்தி விரும்பினாரா? விரும்புவாரா? ராமராஜ்யத்தில் நாலாவது ஜாதிக்காரன், ஆண்டவனை வணங்கிய குற்றத்திற்காக ராமன் ஆணையால் கொல்லப்பட்டான். இன்னும் தசரதச் சக்ரவர்த்தி ஒருவர் இருந்தார். அரசரே வேண்டாமென வெறுப்பவரான மகாத்மா சக்ரவர்த்தியின் ஆதிக்கத்திலடங்கிய ஆட்சி முறையை ஏற்றுக்கொள்வாரா? ஜனநாயக அடிப்படையில் ஆட்சிமுறை அமைக்கப்படவேண்டும் என்பதல்லவா மகாத்மாவின் விருப்பம்? பேச்சிலும் மூச்சிலும் இதைத்தானே எண்ணிவந்தார். இன்னும் அந்தத் தசரதச் சக்ரவர்த்திக்கு 60000 மனைவிமார்கள் வேண்டுமே. இது மட்டுமா? எவ்வளவோ விபரீத முறைகள் தாண்டவமாடின சாம்ராஜ்யத்தையா உலக உத்தமர் ஆசைப்பட்டார். ஆகவே மகாத்மா காந்தி ஒரு நாளும் ராமராஜ்யத்தை விரும்பவில்லை. பின்பு ஏனிந்தப் பொய்யைச் சொல்லி வந்தார் என்று எண்ணுகிறீர்கள்? வள்ளுவர் சொன்னார், மகாத்மா அதைக் கடைப்பிடித்தார். என்ன அய்யா வள்ளுவர் பொய் சொல்லவா கூறினார்?

சத்தியம் என்பது பற்றிக் கூற வந்த வள்ளுவர்.

"வாய்மை எனப்படுவது
யாதெனில்; யாதொன்றும்
தீமையிலாத சொலல்" என்றார். இக்குறள், வாய்மை என்னும் அதிகாரத்தில் சொல்லப்பட்டது. எந்த உயிருக்கும் கெடுதி வாராதமுறையில் எதுசொன்னாலும் சத்தியம் என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார். இன்னும் கூர்ந்து நோக்கினால் மகாத்மா, வள்ளுவர் சொன்னதைவிட, ஒருபடி மேலே போய்விட்டார். எவ்வுயிர்க்கும் தீமை பயக்காத முறையில் மட்டுமல்ல, எவ்வுயிர்க்கும் நன்மை பயக்கக்கூடிய விதத்தில்தான், இந்த ராமராஜ்யம் என்ற பொய்யைப் புகன்றுவந்தார். பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ணவேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும், அதிகாரமும் இருக்கிறது என்று நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்த ஜாதி தாழ்ந்தஜாதி என்ற வித்யாசமே இருக்கக்கூடாது. எல்லோரும் இன்பமாகச் சரிசமமாக வாழவேண்டும். அத்தகைய தேசத்தை உருவாக்கவே நான் பாடுபடுகிறேன் என்று மகாத்மா தனது கொள்கையை எடுத்துரைத்திருக்கிறார்.

இம்மாதிரியான, நாட்டை உருவாக்க உழைத்தவர் ராமராஜ்யத்தை ஏற்றுக்கொள்வாரா? இந்த லட்சியத்துக்காக மகாத்மா, படாதபாடு பட்டார், பல்லுடைபட்டார். பஞ்சை வாழ்க்கை நடத்தினார். பட்டம் பதவிகளைத் துறந்தார். பின்னர் ஏன் ராமராஜ்யம் என்று சொல்லி வந்தார்? நாட்டின் சூழ்நிலை காரணமாகத்தான். நமது நாட்டில்—குறிப்பாக வடநாட்டில், மதத்தில் கையை

வைப்பது என்றால் எளிதானதல்ல. பெருந் துணிச்சல் வேண்டும். இது பிறவித் தலைவர்களாலேதான் முடியும். வடநாட்டில் மகாத்மாவும் தென்னாட்டில் நமது பெரியாரும் இந்தத் தொண்டைச் செய்து வந்தார்கள். இவ்விரு தலைவர்களின் துணிச்சலுக்கு உவமை சொல்ல முடியாது. நமது வள்ளுவர், தூங்காமை கல்வி துணிவுடைமை இம் மூன்றும் நீங்காத குணங்களாய் அமைந்திருக்க வேண்டும் என்கிறார். தூங்காமை என்றால், எதிலும் எப்பொழுதும் விழிப்பாக இருக்கும் தன்மை. அதாவது எதிரிகள் வார்த்தைகள் தன்னிலும் வாதம் தன்னிலும், ஜாக்கிரதையாகக் கவனஞ் செலுத்தி உண்மையைக் கண்டு பிடிக்கும் கூர்மையான புத்தி. கல்வி என்றால் யோசித்து ஆராய்ந்தறியும் அறிவு. இவ்விரண்டினாலும் ஏற்படும் துணிவுடைமை. இம்மூன்றும் ஒருங்கே காணப்படும் தலைவர்கள் உலகிலேயே மிக அபூர்வம். மஹாத்மா, பெரியார், ஆகிய தலைவர்களிடம் இம் மூன்று குணங்களும் காணப்படுகின்றன. வட்டமேஜை மகாநாட்டுக்காக லண்டன் சென்ற மகாத்மாவுக்கு, பிரிட்டிஷ் சக்கரவர்த்தி ஒரு விருந்தளித்தார். சரிசமமாக அமர்ந்து கொண்டு விருந்துண்ணும் போது, சிரித்துக்கொண்டே சக்கரவர்த்தி, மகாத்மாவை, ஒரு கேள்வி கேட்டார்.

“இன்று தங்கள் வாழ்க்கையிலேயே மிகச் சந்தோஷமான நாளல்லவா” என்பதுதான் சக்கரவர்த்தி கேட்ட கேள்வி. “ஏன்” என்றார் மகாத்மா. சக்கரவர்த்தியோடு சரிசமமாக உட்கார்ந்து கொண்டு கை குலுக்குவது, வாழ்க்கையிலேயே கிடைக்காத ஒரு சந்தோஷமான நாளல்லவா என்று மீண்டும் குறிப்பிட்டார். “சந்தோஷமானதுதான், ஆனால் இந்தச் சந்தோஷம், ஒரு தோட்டி வேலை செய்யும் ஒரு மனிதனைக் கைப் பிடித்துக் குலுக்கினால் ஏற்படுவது போன்றதுதான். ஏனென்றால் எல்லாரிடமும் இலங்கும் உயிர் ஒன்றுதான் என்பது என் எண்ணம்” என்றார் மகாத்மா. இம்மாதிரி பதில் சொல்வதற்குத் தூய உள்ளமும் துணிவுடைமையும் நிரம்ப வேண்டுமல்லவா? இப்பேர்ப்பட்டவர்கள் தங்கள் லட்சியம் நிறைவேற வேண்டுமென்று பாடுபடுவார்களே தவிர பட்டம் பதவிகளுக்கு ஆசைப்பட மாட்டார்கள். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் அரசாங்கத்தின் உதவியை மகாத்மா கடைசி வரையிலும் நாடவில்லையென்பதைப் பாருங்கள். இவைகளெல்லாம், இத் தலைவர்களின் உறுதியான கொள்கையையும் துணிச்சலையும் எடுத்துக் காட்டுகின்றன. இம்மாதிரியான அருந் தலைவர்கள் நாட்டு மக்களுக்கு

கல்லறிவு காட்டும் அரும்பெரும் ஜோதிகளேயாம்.

மகாத்மா உலகிற்கே ஒரு ஜோதி, ஞானசூரியன். ஒரு வீட்டில் புகுந்து கொள்ளையடிக்கக் கருதும் திருடர்கள், முதலாவதாக வீட்டிலுள்ள விளக்கை அணைப்பார்கள். மின்சார விளக்காயிருந்தால் கம்பியைத் துண்டிப்பார்கள். வெளிச்சத்திற்கும் கொள்ளைக்கூட்டத்திற்கும் பரம விரோதம். இருள்தான் திருடர்களுக்கு வேண்டும். ஆகவே ஒளியை அணைக்க முயலுகிறார்கள். மதவெறியர்கள் தங்கள் மத வேட்டையாடி, ஆதிக்கத்தைக் கைப்பற்ற ஆசைகொண்டு அதற்குத் தடையாக இருந்த, மகாத்மா என்ற அருஞ்ஜோதியை அணைக்கப் பலமுறை முயற்சி செய்தார்கள். கடைசியில் மகாத்மாவின் பூத உடலை பாழும் மதப்பித்து மாய்த்து விட்டது. நினைக்கவேமுடியாத கோர சம்பவம். உண்மையில் மகாத்மா என்ற அருஞ்ஜோதி அணைக்கப்படவில்லை. மங்காத ஜோதியை மங்கவைக்க, பைத்தியம் பிடித்தலையும் மத வெறியர்களால், முடியவே முடியாது. உத்தமர் காட்டிய உலகஜோதி என்றும் சுடர்விட்டு எரிந்து கொண்டுதான் இருக்கிறது. இதோ அணையாத ஜோதியைப் பாருங்கள், இந்த ஜோதிகாட்டும் நெறியைக் கடைப்பிடித்து, நாம் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உலகப் பெரியார் மகாத்மாவின் திருவுருவப் படத்தை வணக்கத்தோடு உங்கள் மனக்கண் முன், உள்ளத்தில் திறந்துவைக்கின்றேன். வாழ்க அன்புடைமை!

வருந்துகிறோம்

நமது இதழின், துணையாசிரியர் தோழர். இராதாமணாளன் அவர்களின் அருமைத் தந்தையார் திரு. டி. ஆர். கோவிந்தசாமி, (வ. ஆ.) வந்தவாசிக்கடுத்த கண்டியநல்லூர் என்னும் தம் கிராமத்தில், சிலநாள் நோய்வாய்ப்பட்டிருந்து அண்மையில் மறைந்தது கேட்டு வருந்துகிறோம். துக்கத்தில் அழுந்தியுள்ள தோழர். இராதாமணாளன் ஆறுதல் பெற விழைகிறோம்.

இதன்காரணமாகவே—'புதுவாழ்வு' தாமதிக்க நேர்ந்துள்ளதுடன் — அவரது கற்பனை ஓவியமான, 'பொற்சிலை' இவ்விதழில் வெளிவரவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

★ ஜெபமாலை

அறிஞர் அண்ணாதுரை

"எங்கே என் ஜெபமாலை? ஐயோ! ஜெபமாலையின்றி நான் ஒருகணமும் உயிர்தரியேனே. என் உயிருக்கு உயிர் ஜெபமாலையல்லவா? என் வாழ்வுக்கு வழி காட்டி, இருதயத்துக்கு இன்பம், துயர் நீக்கும் துணை, கதியளிக்கும் காவல், ஜெபமாலையாயிற்றே. ஜெபமாலையின்றி நான் எப்படி இருக்க முடியும்?

என் எதிரே, முத்து, ரத்னம், தங்கம், பட்டு, எல்லாம் இருந்தும் என்மனம், ஜெபமாலையையே நாடுகிறது. ஜெபமாலை என்னை ஆட்கொண்டபிறகு, வேறு எதற்கும் நான் அடிபணிய மாட்டேன். ஜெபமாலை வேண்டும்! இப்போதும், எப்போதும்! என்னுடனேயே இருந்தாக வேண்டும். கொண்டு வா ஜெபமாலையை."

ஜெபமாலை, ஒளிந்திருந்த இடத்திலிருந்தே 'களுக்' கெனச் சிரித்தாள். எவ்வளவு பசப்புகிறுன், என்னென்ன புரட்டிப் பேசுகிறுன்; உண்மையா அவனுடைய உரை? இல்லை! உள்ளத்திலிருந்தா வந்தன, கிடையாது, உதட்டளவுதான். என் ஜெபமாலை ஜெபமாலை என்று உருகுபவன்போல நடிக்கிறுன், இலாபமிருப்பதால்!

ஜெபமாலை, கோபுரநாதன் மகள், ஊரெங்கும் கோபுரநாதனுக்கு மதிப்பு. ஜெபமாலையை மணந்ததால், அந்தக் குடும்பச் செல்வாக்கு, ஆண்டிக்குக் கிடைத்தது. ஆண்டி, வேலை வெட்டி செய்யாமல், பரிமளமாக வாழ்ந்ததே, ஜெபமாலையின் தயவினுல்தான். ஜெபமாலையுடன் ஆண்டி வாழ்ந்ததால்தான், ஆண்டிக்கு, ஊரிலே செல்வம், செல்வாக்கு, எல்லாம். கண்ணியமும் காணிக்கையும் கிடைக்கும்படிச் செய்ததாலேயே ஜெபமாலைமீது, ஆண்டி, தனக்கு அமோகமான காதல் இருப்பதாகக் கூறினுன். ஆண்டியின் மனதுக்குச் சந்தோஷமூட்டுவது, ஜெபமாலையின் 'சிபார்சு' பெறஉதவும்; அந்தச் சிபார்சு, கோபுரநாதனின் உதவியைத் தமக்கு வாங்கித்தரும். ஊரார் ஆண்டியை ஆதரித்ததின் மர்மம் அதுவே. ஆண்டிக்குத் தெரியும் ஜெபமாலையின் அருமை பெருமை. ஜெபமாலைக்கும் ஆண்டியின் 'அன்பு' வெறும் வேஷமே தவிர, உண்மையல்ல, என்பது தெரியும். ஜெபமாலையின் தயவால் செல்வாக்கு பெற்றதும், ஆண்டியின் மனம், தங்கத்திடம் தாவும், முத்து, ரத்னம், பட்டு என்று கண்ட

கண்டபடி இருக்கும் ஆண்டி தேடும் காதல. ஜெபமாலை இதை அறிந்தே நகைத்தாள். ஊராரோ, ஆண்டிக்கு ஜெபமாலையிடம் உள்ள அன்பே அன்பு, தங்கம், முத்து, ரத்னம், பட்டு, எங்கும் மனதை அலையவிடவில்லை பார், எவ்வளவு உறுதி, உள்ளன்பு என்று புகழ்ந்தனர். பைத்தியக்காரர்கள்! ஜெபமாலையைப் பெற்றுவிட்டால் பிறகு ரத்னமும் முத்தும், பட்டும் தங்கமும், ஆண்டியின் அடி தொழ வருகிறார்கள் என்ற தைரியமல்லவா அவனுக்கு. "உங்கள் எதிரே, சொல்லுகிறான், ஜெபமாலையே உயிர் என்று, நீங்கள் போய்விட்டதும், என்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டான், தங்கத்தின் தளுக்கு, முத்துவின் மோகனப் பார்வை, பட்டுவின் பளபளப்பு இவைகளிலே சொக்கி விடுவான், நான் கிடப்பேன் ஒரு மூலையில், கவனிப்பாரற்று. இதை அறியாமல், என்னையே அவன், உள்ளன்போடு நேசிக்கிறான் என்று எண்ணி ஏமாறுகிறீர்களே!" என்று ஜெபமாலை எண்ணிச் சிரித்தாள்.

ஆண்டி, உள்ளே சென்றான் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு.

"ஜெபமாலை! வா! ஏன் தயக்கம்?"

"ஏன் வரவேண்டும்? நயவஞ்சகராகிய தங்களிடம்"

"நமக்குள் இருக்கும் தகராறு பிறகு பார்த்துக்கொள்வோம், நாலுபேர் எதிரே, என்னை அவமானப்படுத்திவிடாதே. வா!"

"முடியாது. உன் மோசடிக்கு நான் எத்தனை காலம் உடந்தையாக இருப்பது. நீ ஊரை ஏய்க்கிறாய், என்மீது அமோகமான அன்புஇருப்பதாகக் கூறி. அவர்களும நம்பி, உன் அடி பணிகிறார்கள். இந்த நயவஞ்சக நாடகத்துக்குத் தானே நான் பயன்படுகிறேன். என்னிடமா உனக்கு உண்மையிலே அன்பு? ஊரை நீ ஏய்க்கலாம், என்னை ஏமாற்ற முடியுமா?"

"ஜெபமாலை! உன்னால் நான் உயர்வு அடைந்தேன், உன்னை நம்பித்தான் வாழுகிறேன். உன் அருள் இல்லாவிட்டால், நான் ஊராரால் ஒரு காசுக்கும் மதிக்கப்படத்தான் மாட்டேன். உத்தமகுண ஜெபமாலை! என்னை இந்தச் சமயம், கைவிடலாமா?"

"இப்படிப் பசப்பிக் கொண்டே இருப்பானேன்?"

"பழகிவிட்டேன் அப்படி! என்ன செய்வது?"

"இந்த "மோசடி' க்கு நான் உடந்தையாகவே இருந்தால்கூட இன்னும் நெடுநாளைக்கு உன் காலம் இப்பொழுது உள்ளது போலவே இருக்குமென்று நினைக்காதே"

"ஜெபமாலை! ஏன், உனக்கே உன் சக்தியிலே சந்தேகம்? வேண்டாம். நீ இருக்குமட்டும் எனக்கு ஒரு குறையுமில்லை"

"அதுதான் தவறு, என்று சொல்கிறேன். காலம் இப்படியே

இராது. ஜெபமாலையிடம் காட்டும் அன்பு வெறும் வேஷம், உண்மையான அன்பு, தங்கத்திடம் என்று ஊரார் தெரிந்து கொள்வார்கள். இப்போதே அந்தத் தெளிவு ஏற்பட்டுக் கொண்டுதான் வருகிறது!''

''ஜெபமாலை! நீயா இப்படிப் பேசுகிறாய்? நீ யாருடைய மகள்? எப்படிப்பட்ட குடும்பம்?''

''கோபுரநாதருக்கே கூடத் தான் இப்போது, குறைந்து வருகிறது செல்வாக்கு''

''ஏன்?''

''ஏன்! ஜெபமாலை, போன்ற மகளை, உன் போன்றவர்களுக்குத் தந்துவிட, அந்தச் சம்பந்தத்தைத் துணையாக வைத்துக் கொண்டு நீ, ஊரை ஏமாற்றுவதால்தான்''

''நான் என்ன ஏமாற்றினேன், ஜெபமாலை''

''விரிவாகக் கூறவா? வயிறு எரிகிறது. ஊராரின் உபத்திரவம் அத்தனையையும், கோபுரநாதரிடம் எடுத்துக் கூறித் தீர்த்துவிடுவதாகக் கூறுகிறாயல்லவா?''

''ஆமாம்''

''ஊரார், ஏன் நம்புகிறார்கள்? உன் திறமையை மதித்தா?''

''இல்லை! என்னுடன் நீ இருப்பதால்''

''ஊராரின் தொல்லை தீருகிறதோ?''

''இல்லை என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது''

''நீ, உண்மையிலே கோபுரநாதரிடம் முறையிட்டுக் கொள்வது, மக்களின் கஷ்டத்தைப் போக்குங்கள் என்று?''

''போ, ஜெபமாலை! என் மானத்தையே வாங்குகிறாய்''

''நான் அறிந்து கொண்ட இந்த உண்மைகளை, ஊரார் தெரிந்து கொண்டால் பிறகு தெரியும் உன் செல்வாக்கு''

''பயம் காட்டாதே, ஜெபமாலை!''

''பயம் காட்டவில்லை; நானே பயப்படுகிறேன். நீயும் கூடச் சேர்ந்துதானே எங்களை ஏய்த்தாய் என்று ஊரார் கோபித்து என்னையும் துன்புறுத்துவார்கள் என்று எண்ணிப் பயப்படுகிறேன்''

''போதும் உன்னுடைய வாதம்! வா! ஜெபமாலை! உன்னைப்பெற்ற பிறகு நான் இழக்கத் துளியும் சம்மதியேன். உன்னை விடமாட்டேன். முடியாது. நீ இல்லாவிட்டால், என் கதி என்ன ஆகும்? எனக்கு இப்போதுள்ள உயிரிலே இருக்குமா பிறகு! ஜெபமாலை! ஜெபமாலை! வா, வா! என்னோடு இரு! கைவிடாதே! ஜெபமாலை வா, வா!''

★

''ஏ! புதுமடத்தாண்டி, என்ன இது, குளறிக்கொட்டறே! ஜெபமாலை, ஜெபமாலைன்னு கூச்சலிட்டு எங்க தூக்கத்தையும் பாழ் செய்யறே. என்ன இழவு கனவு கண்டு கூவினே?''

பக்கத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த பண்டாரங்கள்

புதுமடத்தாண்டி, தூக்கக் கலக்கத்திலே ஜெபமாலை, ஜெபமாலை என்று உளறியது கேட்டுத், தட்டி எழுப்பி, என்ன விஷயம் என்று கேட்டனர்.

திடுக்கிட்டு எழுந்த புதுமடத்தாண்டி, முதலிலே தன் திரு ஓட்டைத் தேடினான், அதிலே தன் ஜெபமாலை இருக்கக்கண்டு "அப்பா! இருக்கு!" என்றான். பிறகு சொன்னான், கனவிலே ஜெபமாலை ஒரு பெண்ணாகத் தோன்றித் தன்னிடம் வாது புரிந்ததையும், வம்புக்கு நின்றதையும். அதுதான் மேலே இருப்பது.

புதுமடத்தாண்டியை மற்றவர் கேலிசெய்தனர், பித்தமா உனக்கு, என்று. அவன் மட்டும் கோபத்தோடேயே "கண்டது கனவுதான், ஆனால் ஜெபமாலை பேசமுடியுமானால், என்னை மட்டுமா, உங்களை எல்லாம் கூடத்தான், அதே கேள்விகளைக் கேட்டுத் திணறவைக்கும் என்று சொன்னான். மேலும் சற்று உரத்த குரலிலே சிரித்தனர் பண்டாரங்கள். "டே! புதுமடத்தாண்டி! திருவாவடுதுறை, தருமபுரி, சிருங்கேரி, முதலிய இடங்களிலே கேள்வி— கேட்கத் துணிவில்லாத ஜெபமாலை, போயும் போயும், போக்கிடமற்ற நம்மிடமா கேள்வி கேட்கும். அங்கே அல்லவா, உன் கனவிலே நடந்த காட்சி நடக்க வேண்டும்" என்றனர்.

"அதுசரி! ஆமாப்;" என்று கூறிவிட்டுப் படுத்தான் புதுமடத்தாண்டி. ஒரு புதிய பயம் அவனைப் பிடித்துக்கொண்டது. ஜெபமாலை ஒருநாளும் பேசப் போவதில்லை, ஆனால், ஜனங்களே அதுபோலப் பேசஆரம்பித்தால், கேள்வி கேட்கத் தொடங்கினால், ஆபத்தாக முடியுமே, என்று நினைத்தான். பயம் கொஞ்சநேரம்தான் இருந்தது. பிறகு அவனும் மற்றவர்கள் போலவே, ஆனால் மனதிற்குள் சொல்லிக் கொண்டான். "அந்தப் பெரிய இடங்களைக் கேள்விகேட்டு, என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளைச் செய்துவிட்டுப் பிறகு தானே நம்மைப் போன்றவர்களைக் கேட்க வருவார்கள், பார்த்துக் கொள்வோம் அப்போது" என்று, தூங்கினான் நிம்மதியாக.

★ கிரேக்க நாட்டின் கீர்த்தி ★

K. A. மதியழகன்

கிருஸ்து பிறப்பதற்கு நான்கு, ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே கிரேக்க நாடு பல துறைகளிலேயும் மகோன்னத நிலையுற்று ஒளிர்ந்தது. மிகப் பழங் காலத்திலேயே திராவிட நாடு எப்படி நாகரிகத்தின் தொட்டிலாய் அமைந்ததோ அதுபோலவே நாகரிகப் பெருமை பாராட்டிக் கொள்ள கிரேக்க நாட்டிற்கும் உரிமை உண்டு. கிரேக்க நாட்டின் கலைப் பண்பு, சிந்தனை, அறிவொளி ஆகியவை அவனியிலே சுடர்விளக்காய் இன்றளவும் இலங்குகின்றன.

எழில் நகரம் ஏதன்ஸ் (Athens) தான் அறிவின் உறைவிடமாயும், கலை வளரும் பண்ணையாயும் அமைந்திருந்தது. இந்த அருமையான ஏதன்ஸ் நகரம் பெரிக்ளிஸ் (Pericles) என்ற மன்னனின் ஆளுகைக்கு உட்பட்டது. பெரிக்ளிஸ் மன்னன் அஞ்சா நெஞ்சன், ஆண்மையாளன், அறிவாற்றல் மிக்கவன். பெர்சியரின் படையெடுப்பிலே பாழ்பட்ட எழிலமைந்த ஏதன்ஸை புதுப்பிக்க முனைந்தான். இன்று சிதைந்த சின்னங்களாய்க் காணப்படுபவை பெரிக்ளிஸ் மன்னனின் மகத்தான முயற்சியில் உருப்பெற்றவையின் துண்டுகளே! ஏதன்ஸ் நகரைப் புற அழகுடையதாய் மட்டும் ஆக்கவில்லை. மாடமாளிகைகள் மட்டுமல்ல, மதிவாணர்களும் ஏதன்ஸை அலங்கரிக்க வேண்டும் என்று விரும்பினான். அறிவு மணம் வீசும் ஏதன்ஸ் மலர வேண்டும் என்ற தனது ஆசைக்குச் செயலுருவம் தந்தான். எனவே சிற்பிகளை, ஓவியக் காரர்களை, கட்டிடக் கலைஞர்களை அழைத்தான். அதோடு நிறுத்தவில்லை. காவிய கர்த்தாக்கள், நாடக ஆசிரியர்கள் தத்துவ ஞானிகள், ஆகிய வேறு பல அறிஞர்களையும் அழைத்தான். ஹிரடோடஸ் (Herodotus) தான் எழுதிய வரலாற்று நூலை இங்கு வாசித்தான். அனக்ஸகோரஸ் (Anexagorus) என்பான் சூரியன், சந்திரன் இவைகளின் விஞ்ஞான வருணனையை விளக்கினான், சொபொக்ளிஸ் (Sophocles) யூரிபைட்ஸ் (Euripides) ஆகியோர் கவர்ச்சியுள்ள, அழகிய சாகாவரம் பெற்ற அருமை நாடகங்களை ஆக்கித் தந்தனர். இவையாவும் பெரிக்ளிஸ் வேந்தனின் கலை ஆர்வத்தில், ஆதரவில் தோன்றிய கலைப் படைப்புகள்!

ஆனால் பெரிக்ளிஸ் மன்னன் மாண்ட பின்னரும் அவனது மாண்பு பேசப்பட்டது.

கிரேக்க மண்டலத்தின் அமைதி, அரசாளும் உரிமைப் போட்டியால் கிளம்பிய போர் எனும் சூருவளியால் குலைக்கப் பட்டது. ஏதன்ஸ், ஸ்பார்ட்டா நகரங்கள் ஒன்றோடொன்று மோதின. எங்கும் ரத்தக் களரி! பிணக்குவியல்! அழிவின் கோரச் சித்திரம் அழகிய அந்த நாட்டின் அன்றாட நடவடிக்கைகளாயின. இவைகளின் காரணமாய் கிரேக்கக் கலை வளர்ச்சிக்குச் சிறிது தடை ஏற்பட்டது. ஆனால் பெரிக்ளிஸ் மன்னன் காலத்திற்கு முன்பே வாதத்திறமைக்கும் வாக்குச் சாதுரியத்திற்கும் கிரேக்க சமுதாயத்தில் உயரியதொரு இடம் இருந்தது. எந்தப் பிரச்னையைப் பற்றிய முடிவையும், தீர்ப்பையும் மன்னர்களோ, மதகுருமார்களோ செய்யவில்லை. மக்கள் மன்றமே தீர்ப்பை வழங்கியது. எனவே வலிவுள்ள வாதத் திறமை, வசீகர வாக்கு வன்மை இவைகளுக்கு முக்கியத்துவமும் சிறப்பும, மரியாதையும் ஏற்பட்டன. இந்தப் பேச்சுக் கலையிலே, சோபிஸ்டுகள் (Sophists) என்ற ஆசிரியர்கள் இளைஞர்களுக்குப் பயிற்சி யளித்தனர். வாலிபர்களும் இந்த வழியில் வளர்ச்சி யடைந்தனர். பொருள் வளமில்லா விட்டால் பேச்சிலே பொலிவு இருக்காது. கவர்ச்சியுள்ள பேச்சிலே கருத்துக்கள் மின்னியாக வேண்டும். எனவே பேச்சுக் கலை கருத்து வளர்ச்சிக்கு உதவியது. கிரேக்கக் கருத்து அறிவு, ஆராய்ச்சி அத்தனையும் இந்த எழுச்சியில் வளர்ந்தன. பேச்சுக் கலைஞர்களின் முயற்சிகள், போட்டா போட்டிகள்—இவைகள் நாட்டிலே சிந்தனு சக்தியை வளர்த்து எண்ணத்தின் தன்மை, மொழி நடையின் சிறப்பு, வாதநேர்மை ஆகியவற்றை வளரச் செய்தன.

இந்த நேரத்தில் கிரேக்க வானில் சுடர் விட்டவன்தான் ஸாக்ரடீஸ் (Socrates) என்ற சிந்தனைச் சிற்பி. ஏன்? எதற்கு? என்று கேள் என்ற சிந்தனை வித்துக்களைத் தூவினான். நல்ல கூர்த்த மதியுடைய பல இளைஞர்கள் சாக்ரடீஸைச் சுற்றிக் கூடினர். சாக்ரடீஸ் வாலிபர்களைக் கெடுக்கின்றான், மக்கள் மனதைக் கலக்கிறான், எனவே மரண தண்டனை விதிக்கிறோம் என்று கூறி நஞ்சுக் கோப்பையைக் கையிலே கொடுத்து கி. மு 399 ஆண்டு அறிஞனின் உயிரைக் குடித்தது அரசாங்கம். இந்த சர்பவம் கிரேக்க வரலாற்றையே கறைப்படுத்தி விட்டது. சாக்ரடீஸ் மாண்டானே தவிர அவன் எழுப்பிய சிந்தனைப் பொறிகள் சாம்பலாகவில்லை. பெருநெருப்பாகப் பரவத் தொடங்கியது. மக்கி மடியவில்லை, மாருக மலர்ந்து மணம் வீசியது. அவனது போதனையைச் சீடர்கள் பிரசாரம் செய்தனர்.

சாக்ரடீஸின் பிரதம சீடன் தான் தத்துவ ஞானி பிளேட்டோ (Plato). இவன் தன்னுடைய தத்துவக் கருத்துக்களை மாணவர்களுக்கு போதித்தான். இவனது போதனையை இருகூருகப் பிரிக்கலாம். ஒன்று மனிதசிந்தனையின் அடிப்படை

களும் வழிகளும் என்பது. மற்றது பல்வேறு நாட்டு அரசியல் அமைப்புகள் என்பது. இவற்றை ஆராய்ச்சி உரை கல்லில் உரசிப் பார்த்து உண்மைகளைப் பரப்புவதே அவன் செய்த பணியின் சாரம். யுடோபியா (Utopia) ஒன்றை அதாவது அது வரையில் உலகில் இல்லாத, ஆனால் இருப்பதைவிடச் சிறந்த சமுதாயத்தை நிர்மாணிக்கும் திட்டத்தை உலகிலே முதன்முதல் தீட்டிய தீரன் இவன்தான். இதுவரை சமுதாயப் பழக்க வழக்கங்களை, மூதாதையர் செய்தது, முன்னோர் கண்ட வழி, தலைமுறை தலைமுறையாக வருவது, தவறு காணுவது தகாது என்று கருதி, ஏன் என்று கேட்காமல் எதற்கு என்று ஆட்சேபிக்காமல், போற்றிவந்த மனித சமூகத்திலே அந்தப் பழைய ஏற்பாட்டை மதிக்க மறுத்தது மட்டுமல்ல, மாறாக மாண்புள்ள ஓர் திட்டத்தை யுடோபியா (Utopia) என்ற நூலின் மூலம் கற்பனை செய்தது மனித மூளையில் புதிதாக உதித்த தைரியத்தை தரணிக்குச் சாட்சியம் கூறுவதாகும். தனது சொந்த மூளை பலத்தால் மூட எண்ணங்களுக்குச் சவுக்கடி தந்தவன் பிளேட்டோ. மனித சமுதாயத்தை நோக்கி வெளிப்படையாகவே இப்படிக் கூறினன், "நீங்கள் இன்று அனுபவிக்கும் அரசியல், சமுதாயக் குறைபாடுகளுக்குக் காரணம் உங்களிடம்தான் உள்ளது. இதை மாற்றுவதற்கு அசைக்க முடியாத நம்பிக்கையும் குலையாத உறுதியுந் தான் தேவை. இப்பொழுதிருக்கிற சமுதாய அமைப்பு தகர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின்படி செயலாற்று வீர்களாயின் இதைவிடச் சிறந்த அறிவு, அழகு, ஆனந்தம் நிரம்பிய புது உலகில் வாழலாம், ஆனால் உங்களின் மகத்தான சக்தியின் அளவை நீங்கள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை.'' இத்தகைய பேருண்மைகளை, அறிவு விளக்கங்களை கிரேக்க நாட்டிற்கு வழங்கினன் பேராசிரியன் பிளேட்டோ. அவனது ஆரம்பகால நூல்களில் ஒன்று தான் "குடியாட்சி" (Republic) என்ற புகழ்பெற்ற நூல். இந்த ஏட்டில் பிளேட்டோ கண்ட பொதுவுடமைப் பொன்னுட்டின் கற்பனைச் சித்திரம் தீட்டப்பட்டுள்ளது.

பிளேட்டோவின் மறைவிற்குப் பிறகு சிந்தனை முறைகளைப் பற்றியும் அரசியல் அமைப்புகளைப் பற்றியும் விசாரணைகளைச் செய்த வித்தகன் அரிஸ்டாடில் (Aristotle) என்பவன். இவன் பிளேட்டோ விடம் பாடங் கேட்ட மாணவன். மாசிடோனிய மண்டலத்திலே ஸ்டாகிரா மாநகரைச் சேர்ந்தவன். இவனது தந்தை மன்னன் மாளிகையிலே மருத்துவராய் இருந்தார். அரிஸ்டாடிலோ, சில நாட்கள் மாசிடோனிய மன்னன் பிலிப்பின் மைந்தனும் அஞ்சா நெஞ்சனும், வெற்றி பல கண்ட வீரனுமாகிய அலெக்சாந்தரின் ஆசிரியராய் இருந்தான். தர்க்க சாஸ்திரத்

திற்கு (Logic) அவன் அளித்த ஆக்கமும், அற்புதமான அறிவுச் செல்வமும் அளவிடற்கரியது. 1500 ஆண்டுகள் வரையில் அவனியிலேயே அவன் வளர்த்த அளவிற்கு மேல் தாண்டி, எவருமே தர்க்க உண்மைகளைத் தரவில்லை. அரிஸ்டாடில் அடங்காத அறிவுத்தாகம் கொண்டவன். மேலும் மேலும் அறிவை வளர்ப்பதிலே அவன் காட்டிய அக்கறை அதிசயமானது. பல திறப்பட்ட அறிவையும் விஞ்ஞான ரீதியாகக் கோர்வை செய்தான். நாலா திக்குகளுக்கும் நண்பர்களையும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களையும் அனுப்பி பல உண்மைகளைச் (facts) சேகரித்தான். இவனே இயற்கை வரலாற்றின் (Natural History) தந்தை. அரசியல் சாஸ்திரத்தை நிறுவியவனும் அரிஸ்டாடிலே. இவனது அரசிபல் ஆர்வத்தை விளக்க ஓரே ஒரு எடுத்துக்காட்டு. இவனது மாணவர்கள் 158 வெவ்வேறு நாடுகளுடைய (States) அரசியல் அமைப்புகளைப் பரிசீலனை செய்தும் ஒப்புநோக்கியும் ஆராய்ச்சி புரிந்தனர்.

ஆம்! இவர்கள் அத்தனை பேரும் இன்று நேற்றல்ல, கிருஸ்து பிறப்பதற்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க நாட்டில் நாம் காணும் "நவீன சிந்தனையாளர்கள்." குழந்தைப் பருவத்திலே இருந்த மனித சமுதாயத்திற்கு வாழ்க்கைப் பிரச்னைகளைப் பற்றி ஒழுங்கான உயரிய முறையில் சிந்திக்கக் கற்றுக் கொடுத்த வழிகாட்டிகள். இது வரை காட்டுமிராண்டித்தனத்தின் காலடியிலே சிக்கி, கணக்கற்ற கடவுளர்களுக்கும் அச்சத்திலே பிறந்த தேவதைகளுக்கும் மருண்டு மருண்டு வந்த மனித சமுதாயத்திலே, அறிவுக்கு விதித்திருந்த தளைகளை, பூட்டப்பட்டிருந்த விலங்குகளை உடைத்தெறிந்த உத்தமர்கள். இருண்ட உலக வானிலே தோன்றி ஒளிவிட்ட நட்சத்திரங்களே இந்த நாகரிகத்தின் சிற்பிகள், முன்னேற்றத்தின் தூதுவர்கள். சுயமாகச் சிந்தனை செய்யும் பண்பை வளர்த்து கிரேக்க நாட்டின் கீர்த்திக்கு உடல், உயிர், வாழ்நாள் அத்தனையும் அர்ப்பணித்தனர் இம்மாபெரும் அறிஞர்கள்!

தமிழர்கள் பெருமை

தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை

[26—12—37-ல் திருச்சியில் நடைபெற்ற தமிழர் மாநாட்டில் மறைந்த தமிழவேள் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து தொகுக்கப்பட்டது. கட்டாய இந்தி புகுத்தப்பட்டதைக் கண்டித்து அன்று அவர் கூறியவை இன்றும் உண்மையாதலைப் படிப்போர் உணர விழைகிறோம்.]

சரிதகாலத்திற்கும் மிகமிக முற்பட்ட காலந்தொட்டு தமிழ் மக்கள் தலை சிறந்த நாகரிகமும் கொற்றமும் வெற்றியுமுடையராய்த் தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் குடிமக்கள். தமிழர் நாகரிகர் என்றால் தமிழர் அருளும் இரக்கமும் உடையவர்கள் என்பதே பொருள். யவனர், அசீரியர், மூர்க்காரர், ஆரியர் ஆதிய அயலவர், எவர் வரினும் எரிவில்லாது அவர்களை வரவேற்று உண்டி, உறையுள் முதலியனதந்து நட்புரிமையுடன் போற்றும் பெற்றியினர். தமிழ் மக்களின் கொடைமடம், படைமடம் பற்றிய செய்திகள் புறநானூறு முதலிய நூல்களில் பரக்கக் காணலாம்.

தமிழ் நாட்டின் எல்லையிலே குடியேறிய ஒருசாரார், தமிழ் மக்களிடம் பொருளும் பூசனையும் பெற்று வாழ்பவராயிருந்தும், தாங்கள் பூமியில்வதியும் தேவர்களெனக் கருதி தாமே உயர்ந்த இனத்தவரென்றும், ஏனோரெல்லாம் இழிந்தோர் என்றும் கொள்கைபற்றி இருந்து வருகின்றனர். இவர்கள் சுயநலக்கருத்தே உடையார். தம்மினத்தவரே உண்ணவும், தம்மவரே நூல் பயிலவும், அறநிலையங்களைப் பிறர் பொருளால் தமக்கே அமைத்துக்கொள்ளவும் வழிகளைத் தேடிக்கொள்பவர். தீண்டாமை என்னும் கருத்துக்கு உறைவிடனாயுள்ளவர். கோயில், குளம், வீடு முதலிய பொதுவிடங்களிலெல்லாம் தமக்கெனத் தனியிடம் வைத்துக்கொள்பவர். ஒரு குலத்திற்கொரு நீதி மனு முதலிய மிருதிகளில் வகுத்துக் கொண்டவர். இத்தகையினர் நம்மிடையே வதிந்து தமிழ் மக்களின் வளமனைத்தையும் தமதாக்கிக் கொண்டாலும், நீர்க்குள் பாசிபோல் வேர்க் கொள்ளாது, உடனிருந்தும் தனித்த பிரிவினராய் இருந்து வருவது கண்கூடு. அவர்கள் அதிவருணாசிரமியாகிய துறவி ஆகலாம், மத மாற்றத்தால் கிறிஸ்தவர் முதலியோராகலாம், சீர்திருத்தக்காரராகலாம், கதரணியலாம், கொழுத்த தேசீய வாதியாகலாம், அவர்கள் குருதியில்

உறைந்தோடும் சுயநலத்தை விடுவதோ அரிது

தமிழ் மக்களோவெனின் தன்னலமே அறியாதவர்— பிறர் நலத்தையே தன்னலமாய் பேணுபவர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் உறுதியைப் பலநூறு ஆண்டுகட்கு முன்னரே கூறியவர். யான் பெற்ற செல்வம் பெறுக இவ் வையகம் எனுங்கொள்கையினர். இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் எனும் இரண்டு சாதியல்லது பிறிதொரு சாதி அறியாதவர். திருக்குறள் போன்ற அற நூலுக்குரியவர். ஊன்பயில் வேள்விகளை மறுத்தவர். இத்தகைய சீரிய கொள்கைகள் யாவையும் ஆரியமக்களின் நீடியதொடர்பால் யாம் மறந்து வருகின்றோம். சாதியைச் சமயமாக்கியும் சமயத்தை சாதியாக்கியும் பெண் மக்களின் உரிமைகளைக் கவர்ந்தும், சாதிப்பெயரால் மக்களை இழிவுபடுத்தும் எண்ணிறந்த பிளவுகளையும், உண்டுபண்ணி அவற்றால் யாங்கள் அல்லற்பட, அவர்கள் இறுமாந்திருக்கின்றனர்.

அரசியல் ஆட்சியைத் தமது இணையற்ற வெற்றியால் கைக்கொண்ட தலைவர்கள், செய்வன தவிர்வன யாவையெனத் தெரியாது, அரசியலைக் கைக்கொண்டால் தாம் செய்வேமெனக்கூறிய உறுதிகளை அறவே மறந்து மக்களுள் எப்பகுதியினரும் வேண்டாத கருமத்தை வன்கண்மையால் நிறுவ முற்படுவது குடியாட்சி முறைக்கும், தாம் மேற்கொண்டொழுகுவதாகக் கூறிவரும் மக்கள் ஊழியத்திற்கும் முற்றும் முரண்பட்டதாகும். அயன் மொழியாகிய ஹிந்தியை தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில் 1, 2, 3 பாரங்களில் கட்டாய பாடமாக்கத் துணிந்தது கொடுங்கோன்மையாகும். இத் தீய செயலால் தமிழ்நாடு எவ்வித நலனும் அடைவதற்கில்லை என்பது சரதம். மக்களின் கல்வி முன்னேற்றமும், அதனை அடிப்பட்ட பிற நலன்களும் பாழ்பட்டொழியும் வடவாரியரின் தன்னலக் கொள்கைகளாகிய இருப்பு விலங்கில் தமிழ் மக்கள் பிணிக்கப்பெற்று மீளா அடிமைகளாக்கப் பெறுவர். இத்தகைய தீமைகளை விளைக்கும் ஹிந்திப்படை எடுப்பின் வரலாற்றினைத் தமிழ் மக்கள் நன்கு ஆராயவேண்டும். ஹிந்தி மொழியானது தமிழ் நாட்டில் செலாவணியற்றது; ஒருவரும் ஒருபோதும் வேண்டாதது.

குடிமக்கள் தேர்ந்துகொள்ளும் தலைவர்கள், மக்களூழியர்களாய் மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை முடித்துத் தருவது குடியாட்சியின் சிறந்த பண்பாகும். அதற்கு முற்றும் மாறாக, மக்களுக்குத் தேவையில்லாததும், மக்கள் ஒருபோதும் வேண்டாததும், அரசியல் தலைமையைப் பெற்ற பின்னர் தாமே விரும்புவதும் ஆகிய ஹிந்திமொழிப் பயிற்சியை இளஞ்சிறார்கள் மூன்றாண்டுகள் படித்தே தீர வேண்டுமெனக் கட்டாயப் படுத்துவது குடியாட்சியா?

தமிழ் மக்களாவார் இனியும் உறங்காது, மந்திரி வகையினரின் செயல்களால் விளையும் நலம் தீங்குகளை ஆராயவும், அடிமை மனப்பான்மையை அகற்றித் தாமே ஆராய்ந்து காணும் முடிபுகளைத் துணிவுடன் கூறவும் தலைப்பட்டு, மந்திரி வகையினரின் தளைகளை அவிழ்த்து, அடிமை வாழ்வை ஒழித்து, உயிரினுஞ் சிறந்த உரிமைகளைக் காத்துக் கொள்ள முற்படவேண்டும்.

ஹிந்தி மொழி கட்டாய பாடமாக்கப்படும் என்ற முடிபினால் ஒரு நன்மை விளைந்திருப்பது கண்கூடு. உறங்கிக் கிடந்த தமிழ் மக்களை விழிக்கச் செய்தது. நாடெங்கும் மிகுந்த பரபரப்பையும் கிளர்ச்சியையும் விளைத்தது.

சாதி, சமயப் பிணக்கங்களாலும், அரசியற் கொள்கைகளாலும் பிளவுபட்ட தமிழ் மக்கள் ஹிந்தி மொழிச் சூழ்ச்சியால் நிகழவிருக்கும் கேடுகளைத் தடுத்து, தமிழ் மக்களின் உரிமைகளையும், தமிழரின் நாகரிகத்தையும் தமிழ் மொழியின் தனிச் சிறப்பையும் பேணி வளர்க்க ஒருமுகமாய் அணி அரண் வகுத்து நிற்கின்றனர். மொழிச் செல்வமும், மொழி மதுகையும் செழித்து வளரும் மக்கட் பகுதியினரே கொற்றத்துடன் உலகெங்கும் வாழ்கின்றனர். மொழி மதுகையில்லாத மக்களினத்தவர் மிக மிகக் கீழ் நிலையில் தாழ்ந்து கிடக்கின்றனர்.

நமது நாட்டில் கல்வியறியாத மக்கள் நூற்றிற்குத் தொண்ணூறினும் மேற்பட்டிருக்கின்றனர். இவர்கள் யாவரும் கல்வியறிவுடையரானாலன்றி குடியாட்சி செம்மையுறுது என்றும் அனைவரையும் கண்ணுங் கருத்தும் உடையாராக்குதல் அரசியலார் இன்னே தொடங்க வேண்டிய கருமம் என்றும் பேரறிஞர்கள் ஒப்புகின்றனர் கல்லா யாந்தர் அனைவருக்கும் கட்டாயக் கல்வியை வழங்குதல் அரசியலாரின் முதன்மையான கடமையாயிருப்பதை அறிந்து வைத்தும் அதனைத் தொடங்காததன் பொருட்டு என்னை? மதுவிலக்கைத் தொடங்கிக் கைப்பொருளையும் இழந்திருக்கின்றோம். பாடசாலைகள் ஏற்படுத்தவோ கட்டாயக் கல்வி வழங்கவோ வகையில்லை என்பது என்ன மதி? மக்களை அறிவுடையராக்கிக் கொள்ள வேண்டிய முதற்கருமத்தைச் செய்யத் தவிர்ந்திருப்பதன் கருத்து, அறியா மக்களை ஆட்டு மந்தை போல் வெருட்டிச் சென்று நயவஞ்சக மொழிகளால் ஏமாற்றி மஞ்சள் பெட்டியில் வாக்குகளைப் போடச் செய்வது எளிதெனக் கருதியா?

இன்றியமையாது செய்ய வேண்டிய கருமத்தைச் செய்யாதொழிந்த தவறோடு நில்லாது செய்யவொண்ணாத தீச்செயலாகிய ஹிந்தி வளர்ப்பை மேற்கொண்டது மலையினும் பெரிய தவறு.

ஹிந்திமொழி கட்டாயபாடமாக்குவதன் காரணம் மனதிற்குத் தோன்றியவாறெல்லாம் பேசப்பட்டு வருகின்றது.

அவை பொருளற்ற வெற்றுரைகளெனத் தலைவராகிய மூதறிஞர்களால் தக்க ஏதுக்களுடன் மறுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியப்பொதுமொழியொன்று வேண்டுமென்பது மந்திரிமார் கூறிவரும் காரணங்களுள் ஒன்று: ஒவ்வொரு மொழியினரும் தத்தம் தாய் மொழியிலே தமது கருத்தை விளக்கும் உரிமையானது மறுக்கப்படலாகாது என்பதே எமது முடிந்த கொள்கை. பொதுமொழி வேண்டுமெனவைத்துக்கொள்வதானாலும் பொது மொழியாதற்குரிய சிறப்புடைய மொழி யாது? அரசியலாரின் பேரவைகளிலும், ஆட்சிக்கழகங்களிலும் வாதத்திற்கு வரும் பொருள்கள், அரசியல், பொருளியல், அறநெறி ஆகிய அறிவு நூல்பற்றிய செய்திகளாகும். அவைபற்றிய வாதங்களை இடர்ப்பாடின்றி நிகழ்த்துவதற்கு சொற்செல்வமும் கலைநூல் வழக்கும் இல்லாத ஹிந்திமொழி ஏற்ற கருவியே அல்ல. அரசியற் கட்சிகளின் தலைமையில் இருக்கும் மூதறிஞர்கட்குத் தேசிய உணர்ச்சியையும், நல்லறிவையும் வளர்த்த ஆங்கிலமொழி சொற்செல்வம் நிரம்பிய இந்தியப் பொதுமொழியாய் இருந்து வருகின்றதே! அதனையே பயில்வதால் விளையுங் கேடுதான் என்னையோ?

ஆங்கில மொழியின் இன்றியமையாமையை உணர்ந்துதானே அதுவும் கட்டாயபாடமாக இருந்து தீரவேண்டுமென மந்திரி வகையினரும் உடன்பட்டிருக்கின்றனர். இந்திய மொழியாயும் உலகப் பொதுமொழியாகவும் இருந்து நம்மவர்கட்கு நல்லறிவை நல்கி வரும் ஆங்கிலமிருக்க, அதனோடமையாது எவராலும் வேண்டப்படாத ஹிந்தி மொழியை வலிந்து நுழைப்பது பயனில் உழவாகும். பருவம் நிரம்பாத சிறுவர்கள் ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இரண்டு அயன் மொழிகளைப் பயிலுவது முடியாத கருமமாகும். தமிழ் மொழி ஆங்கிலமொழி, அறிவு நூல் ஆகிய பாடங்கள் மாணவர்க்கு மிகவும் பயன்படுவன. அவற்றிற்குரிய நேரங்களினின்றும் காலத்தைத் திருடி அதனை ஹிந்திப் பயிற்சிக்கு ஒதுக்குவதால் தமிழ்மொழிப் பயிற்சிக்குரிய நேரம் குறைந்து கேடுறுவதோடமையாது மாணவர்களின் கல்விமுன்னேற்றமும் கெட்டுவிடும். மனிதனுடைய உடலினின்றும் பிரிக்க முடியாது ஒன்றியிருந்து அவன் உடலைக் காத்து வரும் தோலைப் போன்றது தமிழ் மொழி என்பதும் அவன் விரும்பினால் அணியவும், வெறுத்தால் கழற்றி எறியவும் கூடிய செருப்பையும் சட்டையையும் போன்றது ஹிந்தி மொழி என்பதும் உண்மையாயின் இதனைக் கட்டாயப் படுத்துவது எதன் பொருட்டு?

வடமொழிமாணவர் எழுத்தும் சொல்லும் பொதுவாயிருக்கும் ஹிந்தியை எளிதே பயின்று கல்வியில் முன்னேறவும் கல்வித்துறையில் முன்னேற்றமடையாதும், வட

மொழிப் பயிற்சி இல்லாதும் இருக்கின்ற தமிழர்கள் இந்திச் சுமையினால் இடர்ப்பட்டு 3-வது பாரத்திற்குமேல் ஏறாது நின்றுபடவும் செய்யுங் கருத்தா? பெரும்பாலார் கல்வி நிரம்பாது அறிவிலிகளாய் இருக்கச் செய்வதே இதுபோது அரசியலில் தலைமை பெற்றிருக்கும் பெரியோர்களின் கருத்துப் போலும்! உலகத்தின் முற்போக்கினையும், நாகரிக மக்களின் கலைத்திறன், பொருளாக்கம் வாணிகப்பெருக்கம் ஆகியவற்றையும், வல்லரசுகளின் மனப்பான்மையினையும் நமது வலியற்ற நிலையினையும், அறிவற்ற செயல்களையும் ஒப்பு நோக்க அரசியல் ஆட்சியில் இருப்பவர் செய்யக் கருதும் கல்வி நெறித் திருத்தங்கள் கல்வியைச் சீரழித்து நாட்டையும், மக்களையும் கீழ் நிலையில்கொண்டுய்க்குமெனும் அச்சத்தை விளைக்கின்றது. பொதுமக்களின் ஆதரவால் அரசியலில் தலைமைபெற்ற ஒரு சிலர் எதேச்சாதிகாரம் செய்யத் தலைப்பட்டு, தம்மனம் போன வாறெல்லாம் செய்யத் துணியும் மாண்பற்ற செயல்களுக்கு அடங்கி, மக்கள் அடிமைப்பட வேண்டுமென்பது குடியாட்சியின் பண்பா?

மக்களின் முன்னேற்றத்திற்குக் கல்வியும் அறிவுமே அடிப்படை. அரசியலார் செலவில் தொடக்கக்கல்லூரிகள் நிறுவவும், ஆங்கெல்லாம் தாய் மொழியில் கல்வி பயிலவும் கல்லாமாக்கள் அனைவரையும் கட்டாயப் படுத்துமாறு அரசியலாரைத் தூண்டவேண்டும். உயர்தரத் தமிழ்க் கல்வியேயன்றி, அறிவுக்கலை, கவின் கலை, மருத்துவம் சிற்பம், ஓவியமாகிய தொழிற்கலைகள் அனைத்தையும் தமிழ்மொழியில் பயிலுதற்கான பல்கலைக் கழகம் ஒன்றேனும் நிறுவி தமிழ்மக்களால் பேணிவளர்க்கப் பெறவேண்டும்.

தமிழ் வளர்ச்சியிலும், தமிழ் மக்களின் நலப்பாட்டிலும் கருத்துடைய அறிஞர்கள் ஊரெங்கும் கிளர்ச்சி செய்து தமிழ் மக்களை அறைகூவி எழுப்பி பஞ்சாயத்து, ஜில்லா, நகரமாதிய கழகங்களிலும், சட்டசபைகளிலும் நம்முடைய உதவியால் பதவிகள் பெற்றிருக்கும் உறுப்பினர் தமிழ் நாட்டில் ஹிந்தி மொழிக் கட்டாய பாடமாக்கப்படாமல் தடுக்க முனைந்து வேலை செய்யுமாறு தூண்டவேண்டும்.

1, 2, 3 பாரங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக அமைக்கும் பள்ளிக்கூடங்கட்கு மாணவர்களை அனுப்பாது நிறுத்த வேண்டும்; அப்பள்ளிக்கூடங்களில் அமர்ந்து கல்வி பயிலமாட்டோம் எனும் நல்லுணர்ச்சியையும், உறுதிப்பாட்டையும் மாணவர்கள் அடையுமாறு முறையான நெறிகளிலெல்லாம் அவர்களைத் தெருட்டுதல் வேண்டும். இவ்வாறெல்லாம் அரும்பணிகளை ஆற்றுதற்கு செவ்விய மனமும், சிறந்த குறிக்கோளும், மனவுறுதியும் தாய்மொழிப்பற்றும் ஆள்வினையுடைமையும் உடைய தொண்டர் படைகள் நாடெங்கும்

பணி செய்யத் தொடங்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்கள் ஒருங்கு சேர்ந்து தமது அறிவையும் ஆக்கத்தையும் வளர்க்கவும், தமது உரிமைகளைக் காத்துக் கொள்ளவும் தலைப்படுதல் முடிந்த நோக்கம் என்றாலும் இவை முற்றுப் பெறாது இடைமுறிக்கும் தீய கொள்கைகளும், செயல்களும் நமநாடே பரவி நிற்கின்றன. 'ஒன்றே குலம்; ஒருவனே தெய்வம்' என்ற தமிழ் மக்களின் சிறந்த கொள்கை இதுபோது வழக்கு வீழ்ந்திருக்கின்றது. நல்ல பயிர்கள் தலையெடுக்க வொண்ணாது அவற்றினிடையே கொழுமையுடன் வளரும் களைகளை யொப்ப சாதி சமயக் கொள்கைகள் வீறுடன் வளர்கின்றன. அவற்றை நமதிடை பரவச் செய்து வளர்த்து ஊதியங் கொள்ளும் ஆரியக் கொள்கையினர் இத் தீய கொள்கைகளை நிலை நிறுத்தும் கருத்தையே முக்கிய நோக்காகக் கொண்டு சமயம், சமூகம், அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் சமயத்துக்குத் தக்க வேடங்களைப் புனைந்து தமது நய வஞ்சகங்களால் நம்மவரை ஏமாற்றியும், பகைமைகளை மூட்டியும், நம்மைப் படுகுழியில் ஆழ்த்தி அல்லது நம்மவரைப் பொம்மைகளாக அமர்த்தி எல்லாத் துறைகளிலும் ஆட்சியைத் தாமே புரிந்து வருகின்றனர். கூர்த்த மதியுடன் நாம் ஆராய்ந்து இவற்றின் உண்மை காண வேண்டும். உடன் பிறந்தே உடலைக் கொல்லுகின்ற நோய்களைப் போன்று, நம்முடனிருந்து தீங்குகள் புரிந்து வரும் இனத்தவர் துணையை நாடாமலும், அவர்கட்குத் தலைமையை நல்காமலும், விழிப்புடனிருந்து தமிழ் மக்களின் ஒற்றுமை நலங்களைப் பேணி, உரிமைகளைக் காத்து, தமிழர் அறநெறியையும், தமிழர் நாகரிகத்தையும் கடைப்பிடித் தொழுகுதல் வேண்டும். இக் கூறிய நோக்கங்கள் நிறைவேறுவதற்கு உண்மைத் தமிழர் பல்லாயிரவரின் உழைப்பும், பெரும் பொருட் செலவும் இன்றியமையாது வேண்டப்படும். சீலமும் நோன்பும் உடைய தொண்டர்களும், நன்மதியும், வினைத்திறனும் உடைய தலைவர்களும் முற்பட்டால் இவ்வெண்ணங்கள் அனைத்தும் எளிதே நிறைவேறும்.

இந்தியப் பொது மொழி என்ற புனை பெயரால் ஹிந்தி எனும் வடமொழி தமிழ் நிலத்தில் நுழைந்து ஆரியக் கொள்கைகளை வளர்த்து தமிழர் நாகரிகமெனும் வான்பயிரை அழிக்காது காக்கும் பொருட்டு தமிழர் அறநெறி ஆகிய கொழு கொம்புகளில் தமிழ் மொழியாகிய வேலியிட்டு அயலாராகிய பட்டிகள் நுழையாது அரண் செய்து தமிழ்மாகாணத்தைத் தனியே பிரித்துப் பொது நலத்தையே பேணும் தனித் தமிழரசு தோன்றச் செய்தல் வேண்டும்.

பட்டினப் பாக்கம்

இவ்வளவு நாழிகையும் கண்ட எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுத் திடீரென அகநகருக்குள் நாம் நுழைய வேண்டியதாக இருக்கின்றது. இப்பகுதிக்குப் பட்டினப்பாக்கம் என்றலல்லவா பெயர். பட்டினம் என்ற பெயரே தவிர இதில் கடைத் தெருக்கள் மிகுதியாக இல்லை. பெரும்பாலவைகளைத் தான் மருவூர் பாக்கத்திலேயே பார்த்துவிட்டோமே. ஆயினும் சில பெரிய கடைகள் மட்டும் இங்கு காணப்படுகின்றன. இப்பகுதியில் பலவகைகளில், சிறப்பும், உயர்குடிப் பிறப்புங் கொண்ட மேன்மக்கள்தான் வாழுகின்றார்கள்.

அரசர்கள் உலா வருகின்ற தெருக்கள், யானை குதிரை முதலிய நால்வகைப் படைகளும் செல்லுவதற்குத் தகுந்தவாறு இடம் அகன்றுள்ளன. இவற்றைப் போலவே அந்த நகரத்தில் அகன்றுள்ளவை தேரோடும் தெருக்கள்தான். இவைகளில் திருவிழாக் காலங்களில் இறைவன் தேரும், மற்ற சிறப்பு நாட்களில் அரசன் தேரும் சுற்றிவருவதுண்டு. இவற்றை அடுத்து ஓர் பெரிய கடைத்தெரு காணபபடுகின்றது. அரசரும் பெருஞ் செல்வர்களும் வாங்ககூடிய, விலைஉயர்ந்த பொருள்கள் இக் கடைகளில் நிறைந்திருக்கின்றன அரசனால் பெருஞ்சிறப்புகள் செய்யப்பட்ட அளவில்லாத செல்வத்தையுடைய பெருங்குடி வணிகர்கள் இங்குதான் வாழ்கின்றனர். தேரோடும் தெருக்களை ஒட்டி அவர்களின் தெருக்கள் சூழ்ந்துள்ளன.

வானத்தை இடிக்கின்றனவோ என்று காண்போர் ஐயுறும் வண்ணம் கட்டப்பெற்ற மணிகள் இழைத்த பளிங்கு மாளிகைகளைக் கொண்டே இவர்கள் நிலையை நாம் உணர்ந்து கொள்ளுகின்றோம். இவர்கள் செல்வத்திலேயே பிறந்தவர்கள், செல்வத்திலேயே வளர்ந்தவர்கள். நிலவுலகத்தின் நிதிக்கிழவர்கள் இவர்கள்தானே!

செல்வக்குடிகளாகிய இவர்கள் கல்வியிலும் கரைகண்டவர்கள். இவர்களுக்கு அரசனது அவையில் தனிமதிப்பு எப்போதுமே உண்டு. "எட்டி" என்னும் பட்டமும் அதற்கு அடையாளமாக அணியும் பொன்னால் செய்த பூக்களும் இவர்கள் பெற்றிருந்தனர்.

நான்கு மறைகளையும் உணர்ந்த பார்ப்பனர்களில் இருக்கைகள் கூட இவர்களுக்குப் பின்புதான் அமைக்கப்பட்டிருக்கின்றன. தவளைகள் கத்துவது போன்ற மறையொலிகளை நாம் இவ்விடத்தில் கேட்கின்றோம்.

"கோ இயல் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும் மறையோர் இருக்கையும்"

[கோ இயல்: அரசர்கள் செல்லுகின்ற. பீடிகைத் தெரு: கடைத்தெரு, மாடமறுகு: மாளிகை பொருந்திய தெரு, இருக்கை: வாழுமிடம்]

உலகத்திற்கே ஆணிவேர் போன்ற உழவர்கள் வாழும் இடங்கள் நாம் இப்போது காண்பவை. அந்தணரும், வணிகரும் மற்ற மக்களும் இவர்கள் தலைவாயிலில் வந்து, காத்து நிற்கின்றார்கள். உணவிற்கான நெல் முதலிய பண்டங்களைப் பெற்றுச் செல்வதற்காக துறவிகளையும் விருந்தினர்களையும் இனிய முகத்தோடு போற்றி உண்பிப்பது போலவே எல்லோருக்கும் தானியங்களை அளந்து, இனிய முகத்தோடு இவர்கள் கொடுப்பது காணுதற் கினிமையாக இருக்கின்றது. இவர்கள் களஞ்சியங்களில் கடல்போல் நிரம்பி யுள்ள தானியங்களைக் கண்டு நாம் வியப்படைகின்றோம். இந்த நகரம் முழுவதற்கும் உண்டி கொடுத்து உயிர் காப்பவர்களல்லவா இவர்கள். ஆகா! இவர்கள் இல்லாவிடில் உலகம் ஏது? "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்று ஓர் புலவன் கூறியது நம் நினைவிற்கு வருகின்றது. உழவார் உலகத்தாருக்கு ஆணி என்று நம்மை யறியாமல் வாய் உரைக்கின்றது.

இவர்களைக் கடந்து சென்றால், மருத்துவர், சோதிடர் முதலியவர்களின் இருப்புகளும், முத்து மாலைகள் கோப்பவர்கள், சங்கை அறுத்து வளையல் காதணி முதலியன செய்யும் தொழிலாளர் இவர்களின் வாழிடங்களும் உள்ளன.

"விழுக்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொடு
அணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்"

[விழுக்குடி: யாவரும் விரும்பும் குடிகள். ஆயுள் வேதர்: மருத்துவ நூலோர். கணிதர்: சோதிடர். பால்வகை தெரிந்த: பிரிவுபட்ட. மணி குயிற்றுநர்: முத்துக் கோப்பவர். வளைபோழுநர்: சங்கை அறுத்து வளையல் செய்கின்றவர்.]

அரசன் உலா வரும்போதும் அவைக்குச் செல்லும்போதும் கட்டியம் கூறுதல் என்ற வழக்கம் பழங்காலத்தில் உண்டு. இப்போது இவற்றைத் தெருக்கூத்துக்களில் காணலாம். இக் கட்டியங்காரன் ஒருவனை நம்பி சச்சந்தன் என்ற வடநாட்டு மன்னன் ஒருவன் ஏமாந்து போனான் என்ற கதை நாம் படிக்கின்றோம் அல்லவா!

இக் கட்டியங் கூறுவதில் பலவகைகள் உண்டு. கட்டியங் கூறுபவர்கள் நின்று கொண்டே அரசனது புகழைப் பாடுவது ஒருவகை. இவ்வாறு போற்றுகின்றவர்கள் 'சூதர்' எனப்படுவர். வீற்றிருந்து போற்றுகின்றவர்களுக்கு "மாகதர்" என்று பெயர்.

இவர்கள் வீடுகளை அடுத்து அரண்மனைக் கணிகள் அதாவது நல்ல நாள், நாழிகை முதலியன கூறுகின்றவர்கள் வாழிடங்களும், பலவகையாகத் தங்களை உருமாற்றிக் கொண்டு சாந்திக் கூத்து முதலிய அரசர்கள் பார்க்கத்தக்க கூத்துக்களை ஆடுவோர் இடங்களும் தென்படுகின்றன.

இவற்றையும் கடந்தால் பரத்தையர் வாழ் இடங்கள் உள்ளன. அரசர்களுக்கென்றே இன்பம் நுகருவதற்காக ஏற்படுத்தப்பட்ட 'காமக் கிழத்தியர்" என்று சொல்லப்படும் பெண்களும், அகக் கூத்து ஆடும் நாட்டிய மகளிரும், அன்றை அன்றை பரிசம் வாங்கும் விலை மாதரும் இப் பகுதியில் வாழ்கின்றனர். இவர்கள் பெண்களுக்கு ஆடல் பாடல் முதலிய பயிலுவிக்கும் நட்டுவர்களும், கொட்டு மேளக்காரர்களும், இவற்றை அடுத்துக் குடியிருக்கின்றார்கள். கோயிலில் திருவிழாக் காலங்களில், முழவு, மத்தளம் முதலியவைகளை முழக்க வேண்டும்.

> "சூதர் மாகதர் வேதா ளிகரொடு
> நாழிகை கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
> காவற் கணிகையர் ஆடல் கூத்தியர்
> பூவிலை மடந்தையர் ஏவல் சிலதியர்
> பயில்தொழில் குயிலுவர் பன்முறைக் கருவியர்
> நகை வேழம்பரொடு வகைதெரி இருக்கையும்"

[சூதர் : நின்று துதிப்போர். மாகதர் : இருந்து வாழ்த்துவோர். வேதாளிகர் : வைதாளி ஆடுகின்றவர்கள். கண்ணுளர் : சாந்திக் கூத்து ஆடுவோர். கணிகையர் : பரத்தையர். கூத்தியர் : கூத்தாடும் மாதர். சிலதியர் : வேலை செய்யும் பெண்கள். குயிலுவர் : இசைக் கருவியாளர்கள். பூவிலை மடந்தையர் : அன்றைய கூலி வாங்கும் விலைமாதர். வேழம்பர் : விதூடகர்.]

பட்டினப் பாக்கத்தின் கடைசிப் பாகத்தை நாம் இப்போது பார்க்கின்றோம். இந்த இடம் வீரர்கள் குடியிருப்பது. நகரத்திற்கே இரும்புக் கோட்டை போன்றவர்கள் இவர்கள். திரண்டு உருண்ட மலை போன்ற தோளினர். போரை விளையாட்டாகக் கருதுபவர்கள். பொறி பறக்கும் கண்ணினர். புறமுதுகு காட்டாத வீரத்தை உடையவர்கள். முதுகில் புண்பட்டால் உயிரையும் விடுப்பவர். முகத்திலும் மார்பிலும் படும் விழுப்புண்களை வீரத்தின் மதிப்பாகக் கொள்பவர்கள். இவர்களைப் பற்றி வஞ்சிக் காண்டத்தில் பிறகு காணுவோம்.

இம் மறவர்கள் வாழும் இடங்களிலேயே நால்வகைப் படையின் பிரிவுகளையும் நாம் காணுகின்றோம். சிலர் யானைகளைப் பழக்குகின்றனர். விரைந்த பரிகளை விளையாட்டாய்ச் செலுத்துகின்றனர் சிலர். தேரில் ஏறித் திரிகின்றவர்களும் பலர். வீரச் செல்வி இவ்விடத்தில்தான் விளையாட்டு அயருகின்றாள் போலும்!

இன்னும் பெரியோர்கள், முனிவர்கள், முதியவர்கள் வாழிடங்கள் பலவும் அங்கு உள்ளன. இவர்கள் இருப்பதால்தான் உலகமே இயங்குகின்றது.

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து தூண்களால் கட்டப்பட்ட வாழ்க்கை மாளிகையில் அரசு செலுத்துபவர்கள் இவர்கள். பால் புளிப்பினும் பகல் இருண்டு மாறுபடினும் தவறாத சொற்களை உடையவர்கள். இத்தகைய அறிஞர்களைப் பெற்றுள்ள அந்நகருக்குத்தான் குறைவு ஏது?

"கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தேர் ஊருநர் கடுங்கண் மறவர்
இருந்து புறஞ் சுற்றிய பெரும்பா யிருக்கையும்
நீறு கெழு சிறப்பின் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பின் பட்டினப் பாக்கமும்

[கடும்பரி கடவுநர்: விரைவான குதிரையைச் செலுத்துகின்றவர்கள். களிற்றின் பாகர். யானைப் பாகர், ஊருநர்: செலுத்துகின்றவர்கள். மறவர்: வீரர். புறம் சுற்றிய: புறத்தில் சூழ்ந்துள்ள. பாயிருக்கை: பெரிய பரந்த இடம். நீறுகெழு; பெருமை பொருந்திய. மல்கிய: நிறைந்த. பாடல்சால்: பாடுதல் பொருந்திய.]

இத்துடன் பட்டினப்பாக்கத்தின் கடைசி எல்லை முடிவடைகின்றது. அரசனது அரண்மனையில் தொடங்கி இவ்வறிஞர்கள் இருக்கை வரையிலும் பெருநோக்கமாக நாம் ஓரளவிற்குப் பார்த்துவிட்டோம்.

தீபமும் திகைப்பும்

அன்பழகன்

கார்த்திகை நெருங்கிவிட்டது. வீடுகளிலெல்லாம் அகல் 'விளக்குகளை' வரிசை வரிசையாக ஏற்றி வைப்பார்கள். இரவு முழுவதுங்கூட விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றியபடி இருப்பர் செல்வர்கள் வீடுகளிலே, பணியாட்களும் பிறரும். அந்நாளிலே திருவண்ணாமலையிலே தீபம். மலையுச்சியிலே பெருங்கொப்பரை. அது நிறையக் கற்பூரத்துடன் கலந்த நெய். மேலும் மேலும் நெய்யும் திரியும் கொட்டிய வண்ணம் பக்தர்களின் கூட்டம்! தமிழகத்தில் உள்ள பெருவாரியான கோவில்களிலேயும் ' அந்தந்தக் கடவுளின் பொருள் நிலைக்கேற்ற வண்ணம்'' கார்த்திகை கொண்டாடப் பட்டே வருகின்றது.

நாசப்பட்டியல்

தீபத்திற்காக ஆயிரக்கணக்கான மணங்குநெய்யும், நூற்றுக்கணக்கான (கேஸ்) பெட்டி கற்பூரமும் கட்டுக்கணக்கிலே திரிநூலும் எரிக்கப்படுகின்றன. வீடுகளிலே ஏற்றப்படும் கோடிக்கணக்கான கைவிளக்குகளால் ஆயிரக்கணக்கான குடங்கள் அளவுள்ள எண்ணெய் வீணாக எரிகின்றது. தீப தரிசனத்திற்காகத் திருவண்ணாமலைக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான மக்களால், அவர்களது போக்கு வரத்துக்காக ரயிலுக்குச் செலவிடும் தொகையும், வெளியூர்களில் தங்குவதால் ஏற்படும் செலவுத் தொகையும் ஏராளம். அவர்களுக்கு ஏற்படும் நேரச் செலவும உழைப்பு நீக்கத்தால் ஏற்படும் பொருள் இழப்பும் ஏராளம்!

இவ்வளவு பெருங்கூட்டமான மக்கள் ஆண்டிலே ஓரிரண்டு நாட்கள் திருவண்ணாமலையிலே வந்து குவிவதை முன்னிட்டு நூற்றுக்கணக்கிலே கட்டப்பட்டுள்ள சத்திரங்களும், மடங்களும், இந்த நாளிலும் பாழுக்குப் பயன்பட்டுப் பாக்கி இருக்கும் முன்னூற்று அறுபத்து மூன்று நாட்களும் பயன் படாமல், சில சோம்பேறிகளுக்கு உறையுள் ஆவதைத் தவிர வீணாகக் கிடப்பதால் அதற்காகச் செலவழிக்கப் பட்ட மூலதனம் பாழாகின்றது. இவ்வளவு பெருங்கூட்டமாக மக்கள் திரளுவதால் கொள்ளை யடித்து இலாபம் அடைந்து வாழும் கோயிற் பூனைகள், செல்வம் மிக்க செட்டியார் இனத்தாரையும், பிற தமிழரையும் தூண்டிவிட்டு ஆண்டுதோறும் லட்சக் கணக்கான ரூபாய்ச் செலவில் வெள்ளியிலே வாகனம், நூதன ரதம், அற்புதக்கல்யாண மண்

டபம், ஈஸ்வரனுக்குப் பொன்னிலே கவசம், அம்மனுக்கு வைர ஒட்டியாணம், புதிய கோபுரம், கும்பாபிஷேகம், வேத வியாகர்ண பாடசாலை என்பவைகளை அமைக்கச் செய்வதாலும், அவைகளின் விளம்பரத்தின் மூலம் ஏராளமான மக்களைத் திரளச்செய்து அந்தப் பெருங்கூட்டத்தாரிடம் பெருங்கொள்ளைகொண்டு கவலையின்றி வாழ்வதற்கு வழி செய்து கொள்ளுந்தன்மையாலும், பொதுமக்களாகிய தமிழர்க்கு ஏற்படும் பொருள் இழப்பு ஏராளம். எவ்வகையானும் தமிழர் கோடிக் கணக்கிலே தம் பொருளைக் கொட்டியழவும் நாட்டு வளம் கெட்டழியவும் காரணமாகின்றது கார்த்திகை தீபம்.

பொருள் பாழாக்கப்படுவதைத் தவிர மக்களுக்கு ஏற்படும் தொல்லையும், தொத்து நோயும், துயரும் துன்பமும் அளவற்றவை என்பதோடு, அவர்களுடைய 'அறிவு' அழிந்த தன்மையும் திகைப்பையே அளிக்கிறது!

* * *

புராணக்கதை

இது பற்றிய புராணக்கதை யாவருக்கும் தெரிந்ததே! இதன்படி மும்மூர்த்திகள் சந்திக்கின்றனர். ஏன்? எங்கே? எப்பொழுது? யாருக்கும் தெரியாது. மும்மூர்த்திகளிலே ஒருவர் சிவன். அவரே முழுமுதற் கடவுள் எனச் சிவ மதத்தினர் கூறுவர்! அவர் ஏன் மற்ற சாதாரணக் கடவுளரைச் சந்திக்கவேண்டும்? நமக்குத் தெரியாது! சந்திப்பு ஒப்புரிமை படைத்தவர்களிடத்திலேயே நிகழ்வது இயற்கை. மேலும் முழுமுதற் கடவுளின் உயர்வை எடுத்துக்காட்ட வந்த இக்கதையில் சிவனைக் காண மற்றிருவரும் சென்ற போது இவை நிகழ்ந்ததாக வாவது கூறியிருக்கலாம். அவ்வாறும் கூறவில்லை. சந்தித்த இடத்திலேயே யார் பெரியவர் என்ற விவாதம் தோன்றிற்றும்! அவர்களிடையிலே ஏன் தோன்றவேண்டும்? எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்த போது பிரம்மாவும் விஷ்ணுவும், அப்பொழுதே யார் பெரியவர் என்ற சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்பியதின் விளைவா? மற்ற புராணங்களின்படி, விஷ்ணுவின் தொப்புள் கொடித்தாமரையிலே பிறந்தவர் பிரம்மா. விஷ்ணுவின் மகன் பிரம்மா என்று கதையிருக்கச் சந்தித்த போது திடீரென்று சந்தேகம் பிறப்பானேன்? தந்தைக்கும் மகனுக்குமே, யார் பெரியவர், என்ற விவாதம், அதுவும் முழுது முணர்ந்த மூர்த்திகளிடையிலே நடப்பானேன்? முக்காலத்தையும் உணரும் மூர்த்திகள் ஒருவரையொருவர் சந்திக்கப் போவதையே உணரவில்லையா? சந்தித்தால் சச்சரவு ஏற்படும் என்பதை மட்டுந்தான் உணரவில்லையா? அன்றி இவைகளை எதிர்பார்த்தேதான் சந்தித்தார்களா? அப்படியானால் முடிவும் அவர்கள் அறிந்ததேதானே? அதற்காகவா ஒவ்வொரு மூர்த்தியும் ஒவ்வொரு புது உரு

விலே தோன்றவேண்டும்? நாமறியோம் என்பது மட்டுமல்ல, மும்மூர்த்திகளே கூட யாரை எங்கே, எப்பொழுது சந்திக்கவேண்டும் என்ற நிர்ணயமில்லாமலும், ஏன் சந்திக்கவேண்டும் என்ற சிந்தனை இல்லாமலும், என்ன விளையும் என்பதை அறியாமலுமே தான் இருந்திருக்கவேண்டும்!

இது நிற்க. யார் பெரியவர் என்று பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடையிலே வாதம் ஏற்பட்டதே தவிர கதையின்படி யார் பெரியவர் என்ற முடிவு காணப்படவில்லை. இடையிலே சிவனார் ஜோதியாகி வானளாவினார்! இருவருக்கும் பெரியவருமானார்!

ஜோதியாய் நின்ற பெருமான் அடியையும், முடியையும் காணச் சொன்னபோது எப்படிப் பேசினாரோ? அந்த முகந் தெரிந்தால் பிரம்மா—முடியைக் காண்பதும் கடினமாமோ? 'அசரீரி'யாகச் சொன்னதாக வைத்துக் கொள்வோம்! அடிமுடிகளைக் காண விரும்பிய இருவரும் பன்றியும் அன்னமுமாய் உருவெடுப்பானேன்? பன்றியாகப் பலமுறை உரு வெடுத்த பழக்கத்தால் திருமால்தான் உடனே பன்றி வடிவெடுத்தார்! பிரம்மாவாவது ஏன் உயரப்பறக்கக்கூடிய ஒரு பறவையாக உருவெடுக்கக் கூடாதோ தெரியவில்லை! ஜோதியின் அடியில்லையென்றோ முடியில்லையென்றோ கருத முடியுமா? இருந்ததென்றால் இருமூர்த்திகளும் தங்களின் இயற்கை உருவத்தைவிட இதற்கேற்ற புது வடிவெடுத்துங்கூட காணமுடியாத காரணமென்ன? ஜோதியாக நின்றவர் முழுமுதற் கடவுளல்லவா? எனவே அடிமுடி இல்லாத ஜோதியாகி நின்றார் என்றால்—இல்லாத அடியையும் முடியையும் காணும்படிக் கூறியது குற்றமல்லவா? அடி, முடி இருந்ததென்றால்—இருவரும் காணாததால் காண இயலாததால் இம்மூர்த்திகள், படைப்பவர், காப்பவர் என்ற பேச்சு முழுப் பொய்யல்லவா?

விஷ்ணுவுக்கோ, பிரம்மாவுக்கோ கொஞ்சம் புத்தியைப் பயன்படுத்தும் திறமையிருந்தாலும் தாங்களும் ஜோதியாகி அந்தச் சிவ ஜோதியிலே கலந்து ஐக்கியமாகி அடியையோ முடியையோ மட்டுமல்ல, அடி முடி இரண்டையுமே கண்டுத் திரும்பி வெளி வந்திருக்கலாம். அப்படியானால் சிவன் பெருமை நிலைக்காதே என்றெண்ணிய புராணிகர், விஷ்ணுவைப் பன்றியாக்கி, பிரம்மாவை அன்னமாக்கி, அரனின் பெருமையைத் தடுத்தாட் கொண்டார் போலும்!

இனி, பிரம்மா முடியைத் தேடிச் சென்றபோது வந்த தாழம்பூ முடியிலிருந்து வந்ததென்றால் முடியிருந்ததென்றாகின்றது! அப்படியானால் பிரம்மாவால் ஏன் அடைய முடியவில்லை? அவரால் அடையமுடியவில்லையென்றால் தாழம்பூவால் மட்டும் கீழ்நோக்கி அவ்வளவு தூரம் எப்படி வர

முடிந்தது? தாழம்பூ தானாக வரவில்லை, அது அசேதனம், தானாக இயங்குவதன்று, இயற்கையின் தன்மைக்கேற்ப இயல்வது, எனவேதான் கீழே விழுந்தது என்றால்—அன்னப் பறவையிடம் எப்படிப் பேச முடிந்தது? பொய்ச் சான்று கூறியதுதான் எப்படி? அது கூறவில்லை, அன்னப் பறவைதான் அடையாளமாகக் கொண்டுவந்தது என்றால், தாழம்பூவைத் தண்டிப்பானேன்? தாழம்பூவைச் சிவனார் தன்முடித்ததினின்று அது தலையிலே இருந்தது என்பதைச் சிவனார் ஒப்புக்கொண்டதாகத் தானே பொருள்? அப்படியானால் 'ஜோதியின்' முடியிலே தாழம்பூவோ தாழைச் செடியோ எப்படி இருக்க முடியும்? எரிந்து சாம்பலாய்ப் போயிருக்காதா? ஜோதியானபோது இறைவன் அவைகளை நீக்கிவிட்டாரா? பிறகு தாழையின் கதியென்ன? ஜோதியிலே—கங்கை சந்திரன் முதலானோர் தங்கி இருப்பதானால் ஒரு தாழம்பூ ஏன் விழ வேண்டும்? இறைவன் தலையிலே சூட்டப்பட்டு விட்டால் பின் என்றும் அழியாது என்ற கூற்று பொய்ப்பதன்றோ? அதுவன்றிச் சிவனின், முடியினின்று விழும்பொழுதே தாழை பொய் சொல்லிற்றென்றால் சிவனின் மகத்துவந்தான் என்னே?

இறைவன் ஜோதியாய் நின்றதால் தான் அண்ணாமலையே 'தேயுஸ்தலம்' என்று கூறப்படுவதை ஏற்றுக்கொண்டால் பின் ஏன் 'தீபம்' ஏத்துகின்றனர்? அரனுடைய அடிமுடிகளை அரியும் அயனுமே காணமுடியவில்லையென்றால், அடிமுடி இரண்டையும் எவருமே காணக்கூடிய வகையிலே தீபம் அமைப்பதன் அர்த்தமென்ன? அல்லது அத்தீபத்தைக் கண்டவுடனேயே, மக்கள் இறைவனின் செந்தழல் மேனியையும் அடிமுடி காண இயலா வகை விண்ணூர ஓங்கிய உயர்வையும் உணர்கின்றனர் என்றால் தீப விழா நடைபெறும் அதே இடத்தில் அருணாசலேஸ்வரருக்கு ஒன்றரை அடி உயரமுள்ள உருவச் சிலை (விக்ரகம்) எதற்காக? இத்தனை ஆயிரம் ஆண்டுகளாகத் தீபம் ஒளிவிட்டும் சிவனாரின் இலிங்க வடிவமும், மூர்த்தி வடிவமும் ஒரு காலைத் தூக்கியருளும் நடராசரும், பொன்முடி தரித்த சுந்தரேசுவரரும் எதைக் காட்டுகின்றன? அடிமுடியற்ற கடவுளைக் காட்ட 'தீபம்' என்றால் தாளம் தவறாமல் அடிவைத்துச் சதிராடும் சாமியும், இசை கேட்டுருகித் தலை (முடி) அசைக்கும் சாமியும் எதற்காக? தீபம் கண்ட மக்களுக்கு, தீபத்தின் தத்துவம் பேசும் தொண்டர்கட்குச் சிலை வணக்கந்தான் எதற்காக?

அண்ணாமலை தீபத்தைக் கண்டு ஜோதி வடிவைக் கொண்டு, "அங்கெங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்ததை" மக்கள் உணர்ந்து கொண்டால் கோவில்கள் எதற்கு? இவைகளை மக்கள் உணர்தல் எளிதோ,

ஞானிகளன்றோ உணரவல்லார் எனின், "தீபத்தின்' பெயரால் மக்களின் பெரும் பொருள் பாழாக்கப் படுவானேன்?

அகல் விளக்கிலெல்லாம், மின்மினியின் ஒளியிலெல்லாம் இறைவன் ஒளியைக் காண்பதாகக் கூறும் பக்தர்கள் ஆண்டாண்டுதோறும் அண்ணுமலைக்கே செல்வானேன்?

அகில உலகையும் அதில் வாழும் உயிர்களையும் படைத்த முழுமுதற் கடவுள் ஜோதி வடிவினர் என்பதை உலகோருக்கு உணர்த்தவேண்டுமானுல், உலகில் பகல் முழுவதும் விளங்கும் பகலவனையே அதற்கு ஓர் அடையாளமாக்கியிருக்கலாம்! அகல் விளக்குகளுக்கு எண்ணெயோ, தீபத்திற்கு நெய்யும் திரியுமோ வீணுகாது. இவை வீணுவது பற்றிக் கவலையில்லையென்றே கருதினுலும், அரியும் அயனுமே அளவிட முடியாதவன் என்று எழுதிக் காட்டப் பட்ட இறைவன், அவரவர்களின் பொருள்வலிவுக்கேற்பவும், சேர்ந்த நெய் குடம், திரி இவைகளுக்கேற்பவும் அளவிடப் படுவது அறிவுடைமையாகுமோ?

'அண்ணுமலையே' ஜோதி வடிவென்றும், அதற்கு அடையாளமாகவே அதன்மேல் 'தீபம்' ஏற்றப்படுகிறதென்றும் கூறிறுல், ஜோதிவடிவு, ஜோதியை ஏன் இழந்தது என்பதையும் முன்பொரு காலத்தில் ஜோதியாகத்தான் இருந்ததென்ருல், அதுவே நெருப்பாக நின்று மாறிவிட்ட பிறகு எதற்காக செயற்கைத் தீபம் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

'ஒளியே' முக்கியமென்றும் எனவேதான் கடவுள் பெயரால் இவ்விழாவெனில் நூதன மின்சார சக்தியினுல் குறைந்த செலவில் "தீபத்தைப்போல்" பலமடங்கு ஒளியைத் தரக்கூடிய மின்சார விளக்கை ஒன்ருகவோ, ஓராயிரத்து நூற்று ஒன்ருகவோ அமைத்து ஏழை மக்களுடைய பொருளுக்கு அழிவில்லாமலேனும் செய்யலாமே! உற்சவகாலங்களில் தீவட்டிக்குப்பதில் காஸ்லைட் உபயோகிப்பது முறையானுல் இது மட்டும் எப்படித் தவருகும்? அகல் விளக்குக்குப் பதில் மின்சாரத் தொடர்விளக்குகள் அமைத்து கார்த்திகை கொண்டாடும் இக்காலத்து அவசியமெனில் "தீபம்" மட்டும் ஏன் மாற்றம் பெறக்கூடாது?

ஆனுல் தீபமோ வழக்கம் போல் வந்து வந்து போகிறது! தமிழர் பொருளோ என்றைக்கும் எரிகிற நெருப்பிலே எண்ணெயாகிறது! தமிழர் வாழ்வோ இன்றளவும் அறியாமை இருளிலே சிக்கிச் சீரழிகின்றது! இந்நிலையை உணர்ந்ததாலேயே 'தீபம்' நமக்கு ஒளி தருவதற்கு மாருகத் திகைப்பளிக்கிறது. எனவேதான் தீபத்தைப் போற்ற வேண்டாம்! திகைப்புற்றே கலங்க வேண்டாம்!! என்று நாட்டவரை நாம் கேட்டுக்கொள்கிரேம்.

———



உரைகல்

உரிமையின் பரிசு?

காந்தியடிகளின் பிரிவு.

ஓர் தொகுப்பு நூல்

உலக உத்தமர், அன்பின் திரு உரு காந்தியார் அவர்களின் பொன்னுடல் மறைந்த நிலையில் அவரது புகழுடலினைத் தாங்கி வெளிவந்துள்ளது இத்தொகை நூல்.

உலகினரின் கண்ணீர்க் கடலாக, உள்ளக் குமுறலாக உணர்ச்சிப் பெருக்காக, அன்புக்காணிக்கையாக—நிலைப்பெற்றதொரு இலக்கியச் சின்னமாக அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. இதன்கண்—காந்தியடிகளின் வாழ்க்கை, பிரிவு, உலகப் பெருமக்களின் கருத்துரைகள், இதழ்களின் இரங்கல் மொழிகள், காந்தியாரின் அற உரைகள் ஆகிய பலபகுதிகள் அடங்கி உள்ளன. இந்நூலின் சிறப்பு இதைக் காண்பார்க்கே புலனாகும் தகைத்து. பக்கம் 300—விலை ரூ $3\frac{1}{2}$

வெளியிடுவோர் திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.

மகாத்மாவின் மரண சித்திரம்.

இலங்கை அடிகள் S. K. பிள்ளை

உயிர் நீத்த உத்தமர் காந்தியாரின் உயிர் மறுவுலகை அடைந்து ஏற்கனவே அங்கு சென்றுள்ள மற்ற தலைவர்களின் உயிர்களோடு உரையாடுவதாகக் கற்பிக்கப்பட்டு, அதன் மூலம் பல கருத்துக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. சில பிழைகளும் காணப்படுகின்றன. விலை அணா 6.

கிடைக்குமிடம்: ஹொக். ஐலி கம்பெனி, 27, கிரீன் ஹால், பிறைக்கு.

இந்தி மறுப்புப் பாடல்கள்

இயற்றியவர்: புதுவைச் சிவம்.

கட்டாயமாகப் புகுத்தப்படும் இந்தியை வேரொடும் வெட்டி வீழ்த்த—தமிழர்கள் தொடுத்துள்ள போரில், எழுச்சியூட்டவும், இன உணர்ச்சி வளர்க்கவும், அறிவு புகட்டவும், ஆர்வம் பெருக்கவும்—நாட்டுமக்கள் நன்கறிந்துள்ள நம் கவிஞர் புதுவைச் சிவம் அவர்கள்—வழங்குகின்ற இசைச்செல்வமே இந்த ஏடு. இதன் கண்ணே—எல்லோரும் எளிதில் பாடக்கூடிய—பல மெட்டுகளில் அமைந்த, ஓசை நயமும் பொருளழகும் கொண்ட பல பாடல்கள் உள்ளன.

பொதுக் கூட்டங்களில் பாடுவதற்கும், வழிநடையில் இசைத்தற்கும் ஏற்ற பாடல்களும் உள்ளமையினால்—பாடத்தெரிந்த அனைவர்க்கும் பெரிதும் பயனளிக்குமெனக் கருதுகிறோம். விலை அணா 3.

கிடைக்குமிடம்: ஞாயிறு நூற்பதிப்பகம், அம்பலத்தாடுஐயர் மடத்துத் தெரு, பாண்டிச்சேரி.

சிரிக்கும் வையம்

இயற்றியவர் : சாமி பழனியப்பன்

வேண்டாத இந்தியை நுழைத்து வீராப்புப் பேசித் திரியும் விபரீதப் போக்கினரின் விவேகமற்ற திட்டத்தை விரைவினிலே ஒழித்துக் கட்டி வெற்றிகாணும் உள்ளத்தோடு உணர்ச்சிப் பெருக்கிலே பாரதிதாசனார் பரம்பரை என்பது தோன்ற, அழகொழுகும் எளிய இனிய கவிதையிலே கனல் கக்கும் கருத்துக்களை அமைத்து, "சிரிக்கும் வையத்"தைச் சித்தரிக்கிறார் தோழர். சாமி பழனியப்பன். "சிரிக்கும் வையத்தின்" கவிதைச் சிரிப்பிலே மயங்காதார் இல்லை. விலை அணா 4

கிடைக்குமிடம் : சுடரொளி நிலையம், பொ. புதுப்பட்டி—புதுக்கோட்டை.

தமிழ் வாழ்க !

ஆசிரியர் : புலவர் குழந்தை.

தமிழ் வாழ்க ! என்ற எழுச்சிக் குரலைத் தலைப்பாகக் கொண்டுள்ள இந்த ஏடு தமிழ் வாழ ஆரியர் சூழ்ச்சி முறியடிக்கப்படவேண்டும் என்ற அடிப்படை கருத்தோடு தோன்றிய ஓர் தமிழ் நாடக நூல். குற்றமற்ற தமிழில்,விருவிருப்பான கதையமைப்போடு படிப்பவர்க்கும் மகிழ்வளிக்கும் வகையில் அமைந்துள்ள இந் நாடகத்தை இயற்றிய புலவர் குழந்தை அவர்கள் அரசியலாரால் தடை செய்யும் வாய்ப்பைப் பெற்ற 'இராவண காவியத்தின்' ஆசிரியராவார் என்பதொன்றே—இந்நூலின் சிறப்புக்குப் போதிய சான்றாகும். தமிழர்கள் யாவரும், இந்நூலைப் படித்து உடன்பாடு பெற்று நடித்து, மகிழ வேண்டுகிறோம். பக்கம் 64; விலை அணா 8.

வெளியிட்டோர் : வள்ளுவர் பதிப்பகம், பவானி, (ஈரோடு)

இராவணன்

ஆசிரியர் ; A. K. வேலன்

திராவிடத் தோன்றல், தென்னாட்டு வீரன் இராவணன், இராமாயணத்தில்—குற்றவாளியாக்கப்பட்டுக் கூண்டிலேற்றப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ள விதமும், இராமன் புகழப்படும் முறையும், நம் நாட்டிற்கே இழிவாகலின், இவை உண்மையோ என்று ஆராய்ந்தபோது உண்மையல்ல கற்பனையே என்பது பெறப்படுதலின், இக் கற்பனை—நம் இனத்திற்கு ஏற்றதன்று என்பதோடு தாழ்விற்கும் காரணமாகலின்—நம் நாட்டவரின் மனப் பண்புக்கு ஏற்றவகையில் மாட்சிக்குரிய, பெருமைப் படத்தக்க வீரனை இராவணனை இலக்கச் செய்துள்ளதே இக் நாடகமாகும். இதன் கண்—இராமனது நேர்மையற்ற செயல்களும், ஆரியரது அநாகரிகக் கொள்கைகளும் கோட்பாடுகளும், அநுமன், விபீடணன் போன்றவர்களது சதிச் செயல்களும், திராவிடரது தமிழ்ப் பண்பாட்டின் மேன்மையும் சித்தரிக்கப்பட்டுள்ளன. காட்சிகளும், உரையாடல்களும், உள்ளத்தைக் கவரும் தன்மையுடையன.

இந் நாடக நூலுக்குத் தலைவர் பெரியார், தளபதி அண்ணா, கவிஞர் பாரதிதாசன் ஆகியோர் பாராட்டுரை வழங்கியுள்ளனர். திராவிடத் தோழர்களும், தோழியர்களும் படித்தற்கும், நடித்தற்கும் ஏற்ற விதத்தில் இந்நூலை இயற்றித் தந்துள்ள தோழர் A. K. வேலன் அவர்களது முயற்சி பாராட்டுக்குரியது. மூவர்ண முகப்பு. பக்கம் 112. விலை ரூ. 1-12-0.

வெளியிடுமிடம் : செந்தமிழ்ப் பாசறை, கரந்தை, தஞ்சை.

திராவிடர் போர் முரசு

பெரியார் அவர்களின் சொற்பொழிவு

பெரியார், இராமசாமி அவர்கள் அண்மையில் சிதம்பரத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் எழுத்து வடிவமே இந்நூல். இதன்கண் திராவிடர்களின் வருங்கால வாழ்வுக்கு, உணர்ந்து பின்பற்ற வேண்டிய பல கருத்துக்களும், இன்றைய அரசியல் பிரச்னைகளும், விளக்கமாகக் கூறப்பட்டுள்ளதால், திராவிடர் ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறுவது வேண்டற்பாலது. பக்கம்—52; விலை அணா 7.

வெளியிட்டோர்: நியூ ஜஸ்டிஸ் பதிப்பகம், 7. நமசிவாய முதலியார் தெரு, வண்ணாரப்பேட்டை, சென்னை 21.

PEOPLE'S POET

மக்கட் கவி பாரதியார்

அறிஞர். அண்ணாதுரை.

அண்ணா அவர்கள், தமிழ் நாட்டின் முதல் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் அவர்களைக் குறித்து, வானொலியில் நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவைப் பலரும் படித்துப் பயன் பெறுவதற்கென்றே இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்களிடத்தில் பாரதியாரது பாடல்களுக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கின் அடிப்படையையும் பொதுமக்களின் கடமையையும், அவரது காலத்தின் நிலைமையையும், கருத்துச் செம்மையையும், அருமையான நடையில் அழகுபெறக் கூறியுள்ளது, படிப்போர் உள்ளத்தைக் கவரும்தன்மையது. குறிப்பாகக் கல்லூரி மாணவர்கள் படித்துப் பயன் கொள்வார்களாக. விலை அணா 4.

கிடைக்குமிடம்: நியூ ஜஸ்டிஸ், வண்ணாரப்பேட்டை, சென்னை 21.

'புது வாழ்வு'

'மாத வெளியீடு'

தனி இதழ் அணா 4

ஆண்டுக் கட்டணம் ரூ. 3

விளம்பர விகிதம்:

அட்டை, வெளிப் பக்கம் ...	ரூ.	120
,, உள் பக்கம் ...	,,	80
உள் பகுதி, முழுப் பக்கம்...	,,	60
,, அரைப் பக்கம்..	,,	30
,, கால் பக்கம்	,,	20

இனி ஒவ்வொரு இதழும் ஆங்கில மாத முதல் நாட்களில் தொடர்ந்து வெளிவரும்.

விற்பனையாளர் இல்லாத ஊர்கட்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விளம்பரம் பெற்றுத் தருவோர்க்கு தக்க கமிஷன் அளிக்கப்படும். ஆறு மாதங்கட்குக் குறையாமல் தரப்படும் நீடித்த விளம்பரங்கட்கு, கட்டண விவரங்கட்கு நேரில் எழுதுக.

முகவரி: நிர்வாகி,
'புது வாழ்வு'
10, வேளாளர் தெரு,
வேப்பேரி, சென்னை-7.

Edited and Published by K. Anbazhagan M.A., at 10, Vellala St., Madras-7. Printed by Kalappan at Oriental Printing Works, 5, Sunkurama Chetty St., Madras. 1.